285

. No. M. 2797. போட்டிப் பா—பக்கம் 8. 1285 (விலை அணு ஒன்று.)

வர்த்தக ஊழியன்.

VARTHAGA OOLIAN.

Trichinopoly. | Monthly Journal of Commerce, Trade and Industry. | May 1933

மலர் 1.] திருச்சினாப்பள்ளி மே-மீ 1933 [இதழ் 11

"வர்த்தக ஊழியன்" வருட சந்தா.
உள்நாட்டிற்கு ரூ. 1. வெளி நாட்டிற்கு ரூ. 1—8—0
விளம்பர விகிதம்.
அங்குலம் ஒன்றுக்கு ரூ. 0—8—0.
பக்கம் ஒன்றுக்கு ரூ. 10—0—0.
முன்பணமில்லாத விளம்பரங்கள்
பிரசுரிக்க முடியாது. நீடித்தகால விளம்பரங்களுக்கு
மானேஜருக்கு எழுதவும்.

ஆசிரியர்—திரு. டி. வி. கே. நாயுடு.

அட்டவணை

இந்திய வர்த்தகர்கள் மகாநாடு ... 3
ராஜம்—சமூக சீர்திருத்தக் கதை 6
ரயில்வே பகுதி ... 9
தூத்துக்குடி இந்திய வர்த்தக சங்கம் ... 10
சாமான்களுக்கு ரயில்வே சார்ஜுகள் ... 11
இங்கும் அங்கும் 12
சிறு மணித்திரள் 13
வர்த்தக குறி வழக்கு 14
வியாபாரத் துணுக்குகள் 15
S. I. Chamber of Commerce ... 18
Federation of Commerce 19

13 JUN 1933
MADRAS

"VARTHAGA OOLIAN"
Annual Subscription.
Inland Rs. 1—0—0. Foreign Rs. 1—8—0.
Advertisement Tariff.
One inch Rs. 0—8—0. One Page Rs. 10—0—0
Per Insertion.
Advertisement without prepayment will not be considered. For further particulars write to the Manager.

Swadeshi! Buy Indian!!
TWILL SHIRTS
ஸ்வதேசி டுவில் ஷர்ட்டுகள்.
4 ஆப் ஸ்லீவ்ஸ் டென்னிஸ் காலர் Rs. 5/-
முழு ஸ்லீவ்ஸ் டபுள் கப்புடன் Rs. 6/-
வியாபாரிகட்கு தக்க கமிஷன் உண்டு. மொத்தமான ரேட் விபரங்கட்கு எழுதி கேட்கவும்.
ஜானகிராம் ஸ்வதேசி ஸ்டோர்ஸ்,
(காங்கிரஸ் அத்தாக்ஷி பெற்றது.)
தெப்பக்குளம் P. O., திருச்சினாப்பள்ளி. S. I.

SRINILAYAM PRESS ARTISTIC COLOUR PRINTERS BIGBAZAAR, TRICHINOPOLY



Registered Trade Mark.

ஆபரணக் கற்களில்

பெயர் பெற்றவை

எங்கள்

: ஒரிஜினல் :

ரங்கூன் டைமண்ட்ஸ்.

ஒரிஜினல் ரங்கூன் வைரங்கள்.

(Registered Trade Name)

எல்லா நகைகளுக்கும் உபயோகமானவை.

உண்மை வைரங்களைப்போல் பட்டையுள்ளதும் ரவுண்டு சுத்தமுள்ளதும், பிரகாசிப்பதும், வெண்மையுள்ளதும், காந்தி வீசுவதும், தேய்வு ஏற்படாததும், எல்லா விதத்திலும் வைரத்தை ஒத்திருப்பதும் எங்கள் ரிஜிஸ்டர்டு "ஒரிஜனல் ரெங்கூன் வைரங்களே"

ஏழைகள் முதல் தனவந்தர்கள் வரையில் வாங்கலாம். ஒருதரம் வரவழைத்து உண்மையை அறியுங்கள். உத்திரவாதம் உள்ளவை. மாதிரி கமலத்திற்கு எழுதுங்கள். பிடிக்கா விட்டால் ரூபாய் வாபஸ் அனுப்புகிறோம்.

இமிடேஷன் பட்டை சிகப்பு, குச்சை சிகப்பு, தளுக்குப் படிக்கம், கெமிகல் டையமன் இன்னும் பலவித நூதன கற்களும், நகைகளும் நயமாய்க் கிடைக்கும்.

S. அருணாசலம் செட்டி,
M. ராமசாமி செட்டி,
ஷராப் வியாபாரம், பெரியகடைவீதி,
திருச்சினாப்பள்ளி.

MADRAS

இந்திய வர்த்தகர்கள் மகாநாடு.

ஏப்ரல் மாதம் 15௳ இந்திய வர்த்தக சபைகளின் 6-வது வருஷாந்தரக் கூட்டம் டெல்லியில் ஷேத் வால்சந்த் ஹீராசந்த் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்ற பொழுது பேசியதின் சாரம்:—

சென்ற வருஷத்திய நிச்சயமற்ற நிலைமையில் இந்தியாவின் வர்த்தகம் ஸகஜமாக மிகவும் பாதிக்கப்பட்டது. உலக வர்த்தக மந்தம் மற்றொருபுறத்தில் சேர்ந்து கொண்டது. இறக்குமதிகளைவிட ஏற்றுமதிகளின் மதிப்பு நமக்கு எப்போதும் அதிகமாயிருந்தது போய், பிரதிகூலமான நிலைமை இப்போது ஏற்பட்டுவிட்டது. வேறெந்த சுய ஆட்சி பெற்ற நாட்டிலாவது இந்தமாதிரி நேர்ந்திருந்தால் கவர்ன்மெண்டு கலகலத்துப் போயிருக்கும். அவஸர நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருப்பார்கள். இந்தியாவிலோ பிரிட்டிஷ் வர்த்தக கைத்தொழில்களில் ஈடுபட்டவர்களின் நன்மை பாதிக்கப்படாததால் பேசாமலிருந்துவிட்டார்கள். நமது நாட்டின் நிர்வாகம் நம் கையிலிருந்தால் நிலைமை வேறுவிதமாக இருந்திருக்கும். புதிய ஏகாதிபத்யச் சலுகை முறையும், யுக்தாயுக்தம் பார்த்துப் பாதுகாப்பளிக்கும் முறையும் புதிய கைத்தொழில்கள் ஸ்தாபிக்க அனுகூலமாயில்லை. இனி என்னவாகுமோவென்று நம்பிக்கையற்று நிற்கும்படி நமது கதியாகிவிட்டது. இங்கிலாந்தைப்போல இந்தியாவில் இந்திய சாமான் பிரசார சபைகளுக்கு சர்க்கார் ஆதரவு இல்லை. சந்தேகத்துடன் அவைகள் பாவிக்கப்படுவதால் இந்திய சாமான் பிரசாரம் பலனற்றுப் போயிருக்கிறது. நமது நாட்டில் பொறுப்பு வாய்ந்த மந்திரிகள் இதர தேச சாமான்களுக்கே முன்பாத்தியம் கொடுப்பதாயிருக்கிறது. நாட்டின் கைத்தொழில்கள் எப்படி உருப்படும்?

இந்திய சாமானையே உபயோகிப்பதென்று ஒவ்வொரு இந்தியரும் விரதமெடுத்துக்கொள்ள வேண்டும். இதற்குக் காலம் வந்து விட்டது. இந்திய சாமான்களுக்கு நிரந்தரமான தேவையை உண்டுபண்ணி விட்டால் ஏராளமான கைத்தொழில்கள் நடப்பது சாத்தியப்படும். இந்திய சாமான் பிரசார சபைகள் செய்துவரும் நல்ல வேலைக்கு எல்லாரும் ஆதரவளிக்க வேண்டுகிறேன்.

இந்தியாவின் உள்நாட்டு கைத்தொழிலபிவிருத்தியின் நிமித்தம் இந்தியரல்லாத எல்லார் விஷயத்திலும் யுக்தா யுக்தம் பார்த்து நமது வரி விதிக்கும் கொள்கையை மாற்றிக் கொள்ளவும், பிரயோகிக்கவும் நமக்குப் பூரண உரிமையுண்டு. சுய ஆட்சி உரிமையுள்ள ஒவ்வொரு தேசத்துக்கும் இந்த சுதந்தரம் உண்டு. இந்தியர்வை மட்டும் என் இந்த விஷயத்தில் தடுக்க கவர்னர் ஜெனரல் தலைமையில் விசேஷப் பொறுப்பைச் சுமத்த வேண்டும்? நமது நாட்டின் பிறப்புரிமையை விற்க யாருக்கு உரிமை? இதர தேசங்களின் நன்மைகளைப் பறிகொடுக்காமலா பிரிட்டிஷ் கைத்தொழில்களும், பிரிட்டிஷ் கப்பற்றொழிலும் இவ்வளவு முன்னுக்கு வந்திருக்கின்றன? இந்தியா மட்டும் என் அந்த ஆயுதத்தைக் கையாளக்கூடாது? போதிய பாதுகாப்பு இல்லாதவரையில் இந்தியக் கைத்தொழில்கள் எப்படித் தலைதூக்க முடியும்? என்று கூறிவிட்டு ரயில்வே போர்டு அமைப்பு, மற்றும் அரசியல் அறிக்கையிலுள்ள இதர அம்சங்களையும் கண்டித்தார். அமெரிக்காவுடன் கைத்தொழில் போட்டி நடத்தவும் தங்கள் நாட்டு யுத்த தளவாடங்களை விருத்தி செய்து கொள்ளவும் கடன் வாங்கிய தேசங்கள் முயலுவதாக அமெரிக்கா சந்தேகப்படுவதாலேயே சங்கடநிலைமை ஏற்பட்டிருப்பதாகவும், அமெரிக்காவுக்கு அச்சந்தேகம் தெளியச் செய்ய வேண்டுமென்றும், உலகப் பொருளாதார மகாநாட்டில் இந்தியாவின் கைத்தொழில் நிலைமையைத் தெளிவாக எடுத்துக் கூறவேண்டியது அவசியமென்றும் வரி விதிக்கும் முறையை இந்தியா தனக்கு நன்மையான வழியில் கையாள உர்மை வேண்டுமென்றும், அநியாய போட்டியால் இந்தியக் கைத்தொழில்கள் வளர்ச்சியடைய முடியாமல் தவித்துக் கொண்டிருப்பதாகவும், தனி முறையில் இந்தியப் பொருளாதார மகாநாட்டில் தனது க்ஷேமத்துக்கு வழிதேடிக்கொள்ள வேண்டுமென்றும், உண்மையான இந்தியப் பிரதிநிதிகள் அம்மகாநாட்டுக்கு போவது சாத்தியமாகும்படி கவர்ன்மெண்டார் செய்ய வேண்டுமென்றும் அவர் பேசிமுடித்தார்.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின:—

1. இந்தியாவிலிருந்து தங்கம் தொடர்ந்தாப்போல் வெளி நாடுகளுக்கு அனுப்பப்படுவதைக் கண்டு இம்மகாநாடு பீதி யடைகிறது. 1931 செப்டம்பர் மாத முதல் இதுவரை 120 கோடி ரூபாய் பெறுமான தங்கம் ஏற்றுமதியாயிருக்கிறது. இந்திய வியாபார வகுப்பினர் தங்க ஏற்றுமதியால் இந்தியாவின் தங்க ரிசர்வுக்கு நஷ்டமேற்படுவதாகவும் ரிசர்வ் பாங்கி ஸ்தாபிக்கப்படும் சமயத்தில் இந்தியா உதவமுடியாத நிலைமையை அடைவதாகவும் எடுத்துச் சொல்லி இதைக் கண்டித்திருந்தும் கவர்ன்மெண்டார் இவ்விதக் கொள்கையை அநுஷ்டித்து வருவது வருத்தத்தைத் தருகிறது. உடனே தங்க ஏற்றுமதியைத் தடுத்துக் கரன்ஸி ரிசர்வைப் பலப்படுத்த லண்டனில் தங்கத்துக்குள்ள ஸ்டெர்லிங் விகிதப்படி இந்தியாவிலேயே தங்கம் வாங்கத்தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டியது அவசியமென்பதை இந்தச் சம்மேளனம் மீண்டும் வற்புறுத்துகிறது.

ஸ்டெர்லிங்கோடு ரூபாயைப் பிணைக்கும் கொள்கையை கவர்ன்மெண்டார் அநுஷ்டித்து வருவதை இந்தச் சம்மேளனம் கண்டிக்கிறது. ரூபாய் அதற்கேற்ற மதிப்பை அடையும்படி விட்டுவிடவேண்டுமென்றும் இந்தச் சம்மேளனம் வற்புறுத்துகிறது.

இந்தியாக் கவர்ன்மெண்டின் வருமான வரிக் கொள்கை விஷயமாக இந்த சம்மேளனத்துக்குப் பூரண அதிருப்தி இருந்து வருகிறது. வியாபார வகுப்பினரின் கீழ்க்கண்ட கோரிக்கைகளை உடனே அங்கீகரிக்கும்படி இந்த சம்மேளனம் வற்புறுத்துகிறது.

(அ) வருமான வரி சம்பந்தமாக இப்போது விதிக்கப்பட்டிருக்கும் சர்ச்சார்ஜையும் உபரி வரியையும் அடியோடு எடுத்துவிட வேண்டும்.

(ஆ) இப்போதுள்ள வருமான வரி விகிதத்தையும் உபரி விகிதத்தையும் கூடியவரை குறைக்க வேண்டும்.

(இ) இப்போது 1000 ரூபாய் வருமானத்துக்கும் வரி விதிப்பதை விட்டு 2000 ரூபாய் வருமானமுள்ளவர்களுக்கே வரி விதிக்க வேண்டும்.

(ஈ) ஒரு வருஷத்தில் நஷ்டம் ஏற்பட்டால் அதை ஈடு செய்ய பின்னால் அடுத்த மூன்று வருஷங்களில் கிடைக்கும் லாபத்தை உபயோகித்துக் கொள்ள அநுமதியிருக்கும்படி வருமான வரிச் சட்டத்தைத் திருத்த வேண்டும்.

(உ) வருமானவரி சம்பந்தமான அப்பீல்களை பக்ஷபாத மற்ற விசாரணைக் கோர்ட்டார் விசாரிக்கவேண்டும்.

இந்திய ரயில்வேக்கள் சம்பந்தமாக பார்லிமெண்டு சட்டம் செய்ய வேண்டும் மென உத்தேசிப்பதை இச்சம்மேளனடு

அழுத்தமாக எதிர்க்கிறது. அவ்விதம் செய்வது இந்தியா சட்டசபையின் உரிமை மறுக்கப்படுவதாக விருக்கிறது. ஆகவே இந்திய வியாபாரம், கைத்தொழில்கள் ஆகியவைகளின் நன்மையை நாடி சட்டப்படி ஒரு ரயில்வே போர்டு ஏற்படுத்துவதானால் இந்தியா சட்டசபை நிறைவேற்றும் ஒரு சட்டப்படி அதை நிர்மாணிக்க வேண்டுமே யொழிய பார்லிமெண்டு சட்டப்படி அதை நிர்மாணிக்கக் கூடாதென இந்த சம்மேளனம் அபிப்பிராயப்படுகிறது. சர்வகட்சி மகாநாட்டில் கலந்தாலோசிக்காமலும், இந்திய வியாபாரிகளோடு சேர்ந்து யோசிக்காமலும், ரயில்வே போர்டு சட்டப்படி அமைக்கப்படும் விஷயத்தை அரசியல் திருத்த அறிக்கையில் பிரஸ்தாபித்திருப்பதையும் இந்த சம்மேளனம் கண்டிக்கிறது.

சர்க்கரைத் தொழிற்சாலைகளிலும் சர்க்கரை டதனிடும் சாலைகளாலும் உற்பத்தியாகும் சீனிப்பாகு சரிவர உபயோகமாகாததால் சர்க்கரைத் தொழிலுக்குப் பெரும் கஷ்ட மேற்பட்டிருப்பதை இந்தியாக் கவர்ன்மெண்டார் கவனிக்க வேண்டுமென இந்தச் சம்மேளனம் கேட்டுக்கொள்ளுகிறது. இந்தியாக் கவர்ன்மெண்டு சாராய உற்பத்திக்கு வழிசெய்து சர்க்கரைத் தொழிலுக்கு பூரண ஆதரவும் உதவியும் அளிக்க வேண்டுமென சம்மேளனம் கேட்டுக்கொள்ளுகிறது. சில நுணுக்கமான கஷ்டங்களைத் தவிர்க்கக் கவர்ன்மெண்டார் தங்களாலான எல்லாமுயற்சிகளையும் செய்யவேண்டுமென இச்சமஷ்டிக்கூட்டம் யோசனை சொல்லுகிறது. சுத்தி செய்யப்பட்ட சாராயம், சீனிப்பாகு முதலியவைகளுக்கு இறக்குமதி வரியை அதிகப்படுத்தி இந்தியாவில் சர்க்கரைத் தொழிலை நாடிநிற்கும் உபதொழில்கள பல அந்நியநாட்டுப் போட்டியால், பாதகமடையாமல் பாதுகாப்பதற்கு வழிதேட வேண்டுமென்றும் இச்சம்மேளனம் கவர்ன்மெண்டுக்கு சிபார்சு செய்கிறது.

பிறகு இந்தியாவில் அன்னிய நாட்டினர் போட்டிருக்கும் முதலைப்பற்றிய புள்ளிவிவரம் போதுமானபடி தயாரிக்கப்படவில்லையென்றும் வருஷந்தோறும் கவர்ன்மெண்டார் கவனித்து சரியான புள்ளி விவரமடங்கிய அறிக்கையை வெளியிடவேண்டுமென ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1932-ம் வருஷம் ஜனவரி மாதம் 15-ந்தேதிக்குப் பிறகு நிலக்கரி ரயில்வே கட்டணத்தில் நூற்றுக்கு 15 வீதம் சார்ஜ் விதித்தது அந்த தொழிலுக்குப் பாதகம் விளைத்திருப்பதால் உடனே அதை ரத்துசெய்து சுதேசக் கைத்தொழிலுக்கு உதவியளிக்க வேண்டும்.

பதனிடாத ஆட்டுத் தோல்களின் ஏற்றுமதி வரியை நூற்றுக்கு 25 வீதமும் மாட்டுத்தோல் வரியை நூற்றுக்கு 20 வீதமும் உயர்த்த வேண்டுமென்றும் உருக்கு இரும்பு குழாய்களுக்கு டன்னுக்கு 50 ரூ. வீதம் வரி விதிக்க வேண்டும்.

உலகப் பொருளாதார மகாநாட்டில் இந்திய வர்த்தக சமூகத்தின் நம்பிக்கையைப் பெற்றவர்களே இந்தியப் பிரதிநிதிகளாக இருக்க வேண்டுமென இச்சம்மேளனம் அபிப்பிராயப்படுகிறது. பாமர ஜனங்களின் வாங்கும் சக்தியையும் பொருளாதார பலத்தையும் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்காகப் பொதுவாகச் சாமான்களின் விலையையும், முக்கியமாக தேசத்திற்குள் விளையும் தான்யங்கள் முதலிய பொருள்களின் விலையையும் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், மேற்கண்ட இலக்ஷியத்தை மனதிற்கொண்டு இந்தியாவின் நாணயச் செலாவணி, நாணயமாற்று முறைகளை ஒழுங்குபடுத்த வேண்டுமென்றும், பாமர ஜனங்களது உபயோகத்திற்கான சாமான்களைத் தனது தேவைக்குத் தகுந்த அளவுக்கு உற்பத்திசெய்துகொள்ளவும் அபிவிருத்தி செய்யக்கூடிய கைத்தொழில்களை எல்லாம் அபிவிருத்தி செய்துகொள்ளவும் அதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் வேலைக்குறைவையும் பற்றிய பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளவும் இந்தியாவுக்குப் பூரண சுதந்திரமிருக்க வேண்டுமென்றும் உலகப் பொருளாதார மகாநாட்டில் இந்தியாவின் சார்பாக வற்புறுத்தப்பட வேண்டுமென்றும் இச்சம்மேளனம் வற்புறுத்துகிறது.

உற்பத்தி, ஏற்பாடு சம்பந்தமான எந்தத் திட்டத்தை நிர்ணயிக்கும் பொழுதும், பொருளாதார அபிவிருத்தியில் பிற்போக்காகவுள்ள தேசங்களையும் அதில் முன்னேற்றமடைந்துள்ள தேசங்களையும் ஒன்றாகக் கருதக் கூடாதென்றும் எல்லா தேசங்களுக்கும் ஒரேமாதிரியான நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தும்படி சிபார்சு செய்யக் கூடாதென்றும், இந்தியாவைப்போன்று வெளிநாட்டு மார்க்கெட்டுகளை நம்பியிராக் கைத்தொழிற்சாலைகளையுடையதாயும் கைத்தொழில் முன்னேற்றம் அதிகமா யில்லாததாயுமுள்ள தேசங்களுக்கு அபிவிருத்தியடைய இடமளிக்க வேண்டுமென்றும் இச்சம்மேளனம் பலமாக அபிப்பிராயப்படுகிறது.

கப்பற் செய்தி
(Shipping News)

சென்னை துறைமுகத்தில் மே மாதத்தில் எதிர்பார்க்கப்படும் கப்பல்களும் தேதிகளும்:—

மொரு, எரின்புரா 1, சிட்டி ஆப் ஓரான் 2, ராஸ் 4, ரோஹ்ரு 5, சுரை. மைதான் 6, லாகூர், சிட்டி ஆப் லின்கன் யூகன பெல்சு, குஜராத், ஸ்டீரீப் சர்க், இதியோபியா 8, லாகூர் 9, டிஜு—க்ரா 10 சிட்டி ஆப் கிம்பர்லி 12, சிட்டி ஆப் ஹார்வர்டு, சிட்டி ஆப் சிங்கபூர் பீகார் 13 மியோனியா, கிளான் மக்பி 16, அஜேவிரேடியோ 18, கிளான் மக்னயிர், ரஜூலா 19, சவோக்லா, மெயிரா 20 மொரு 21, சில்வர் வில்லோ 22. ஒருயன் பெல்சு 26 சிட்டி ஆப் சிட்னி, காம்பேயான் 27, கிளான் மாசின்டோ 29, சுமட்ரா 31.

மதிப்புரை

பத்திரிகைகள்:—

கீழ்கண்ட பத்திரிகைகள் எப்ரல் மாதத்தில் வரப்பெற்றோம்.

பர்மா நாடு	மார்ச்சு 17 எப்ரல் 10, 17
மலாய மித்திரன்	மார்ச்சு 18, 20 முதல் 25, 27 முதல் 30 வ எப்ரல் 1. 3 முதல் 6, 8, 10 முதல் 13 வ
பாலவிநோதனி	பிப்ரவரி மார்ச்சு
சுதந்திரவீரன்	எப்ரல் 5
விநோதன்	சித்திரை மீ
குலாலமித்திரன்	பங்குனி மீ
இந்திய விவசாயம்	பிப்ரவரி மீ
முரசு	எப்ரல் 13. 23
Indian Mirror	April 1, 8

டிரேட் மார்க்

உங்கள் டிரேட் மார்க்குகள் பெயர்கள் முதலியவைகளை பிறர் உபயோகித்து உங்கள் லாபத்தை அடையாமலிருக்கும் பொருட்டு, உங்கள் டிரேட் மார்க்குகள், பெயர்களை உடனே தாமதம் செய்யாமல்,

கல்கத்தா ரிஜிஸ்டர்

செய்து கொள்ளவும்.

ரிஜிஸ்டர் செய்ய வேண்டியவைகளை பற்றி உடனே அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

பிரின்ஸ் அண்டு கோ

டிரேட் மார்க்கு ஏஜெண்டுகள்

நெ 18. பட்டாபிராம் பிள்ளை தெருவு

தென்னூர், திருச்சினாப்பள்ளி.

BRILLIANT RANGOON KAMALAM.

Can be had in retail also at moderate prices.

Our Brilliant Rangoon Kamalam polished with diamond dust, manufactured in our Diamond Cutting Factory, under the



Expert supervision of highly qualified and well experienced hands, in electric current machines.

A trial is solicited.

From :— **T. B. Govindararajaloo Naidu,**

Burma Chemical Works & Jeweller, 142, Mogul Street, RANGOON.

எனது புதிய தொழிற்சாலையில், கைதேர்ந்த தொழிலாளர்களைக்கொண்டு எனது மேற்பார்வையில் தயார் செய்யப்படும் ரேங்கூன் கமலங்கள் எலக்டிரிக் சக்கர சாணையில் வைர வடினயக்கொண்டு பெருகு தீட்டி அசல் வைரங்களுக்கு ஒப்பான பிரகாச பூரிப்புடன், சுத்தமாக பட்டை தீர்த்து குறைந்த விலைக்கு இந்தியாவில் எல்லா பாகங்களுக்கும் ஏராளமாக அனுப்பப்பட்டு வருகின்றன.

எனது வர்த்தகம் எல்லா ஊர்களிலும் விருத்தியாகி, வியாபாரிகள் தக்க லாபம் அடையும்பொருட்டு, எங்கள் ஊர் நிலவரத்திற்கு சரசமாய் சரக்குகள் மொத்தமாயும் சில்லரையாகவும் அனுப்பி வருகின்றேன்.

ஷை ரெங்கூன் கமலங்களில், பவுனினால் கட்டப்பட்ட பலவித நகைகளும், இமிட்டேஷன், பட்டை சிகப்பு, குச்சை சிகப்பு, பிளேயின் பட்டை, நீலம் திரிகலர், பச்சை, தளுக்கு படிக்கம், படிக்கம், முதலிய கற்களும், தங்கம் வெள்ளி வர்ணத்தகடுகளும், கைவசம் தயாராய் இருக்கின்றன.

தாங்கள் இதுவரையில் எங்களூர் வியாபாரிகளிடம், ஏராளமான சரக்குகள் தருவித்திருந்த போதிலும், ஒரு தடவை ஸ்பெஷலாக எனது ரெங்கூன் கமலங்களுக்கும், நகைகளுக்கும் ஒருமுறை ஆர்டர் கொடுத்து வரவழைத்துப் பார்த்தால் எனது சரக்குகளின் உயர்வும், விலை சகாயமும் நன்கு தெரியும்.

தங்கள் தேவைக்கு இன்றே ஆர்டர் எழுதுங்கள்.

T. B. கோவிந்தராஜுலு நாயுடு,

பர்மா கெமிகல் ஒர்க்ஸ் & நகை வியாபாரம்,

142, மொகல் ரோடு, ரெங்கூன்.

ராஜம்—சமூகசீர்திருத்தக் கதை.

(Social Reform Novel.)

(எம். எஸ். ஆர். சந்திரன் எழுதியது.)

அத்தியாயம் 10.] [ஏப்ரல் மாதத் தொடர்ச்சி.

கெடுவான் கேடு நினைப்பான்.

இருபக்கங்களிலும் மரங்கள் சூழ்ந்த செம்மண் ரஸ்தா வழியே அந்த புதன் கிழமை நள்ளிரவில் ஒரு ஒற்றை மாட்டு வண்டி போய்க் கொண்டிருந்தது. பகல் வேளையில் யாராவது இவ்வண்டியைப் பார்த்திருந்தால் உண்மையில் ஆச்சரியமடைவர் என்பது சர்வ நிச்சயம். ஏனெனில் அந்த ரஸ்தாவில் பெரும்பாலும் மோடார் வண்டிகளும் சிற்சில சமயங்களில் குதிரை வண்டிகளுமே செல்வது வழக்கம். மேலும் அப்பாதை ஹைதராபாத்து நாஜர்ஜங் தெருவுக்குச் செல்லும் ரஸ்தாவும் அல்ல. ஆனால் அந்தப்பாதை கர்நூல் ஜில்லா பக்கம் போகும் ரஸ்தா. வண்டியும் மெதுவாக சென்று கொண்டிருந்தது. வண்டியோட்டி பணத்தாசை கொண்டு இக்காட்டுப் பாதை வழியாக வண்டியை ஓட்டிக்கொண்டு வந்தான். ஹைதராபாத்துக்குச் சுமார் 10 மைல் தூரத்துக்கப்பால் உள்ள காட்டின் மத்தியில்-பயங்கரமானகாடு- காட்டு விருக்ஷங்கள் ஆகாயத்தை அளாவி நிற்கின்றன, புதர்களும் முட்செடி கொடிகளும் அடர்த்தியாக இரு பக்கங்களிலும் இருக்கின்றன, காய்ந்த தழைகளின் சத்தமும், மரங்களின் கிளைகளும் காற்றினால் அசைவுற்று அதன் ஓசையும் அதிகரித்தது. எங்கும் ஒரே இருள். விருக்ஷங்களின் அடர்த்தியால் நட்சத்திரக் கூட்டங்களின் ஒளியும் ரஸ்தாவில் தெரியவில்லை. வெகு தூரத்துக் கப்பால் நரிகள் ஊளையிடும் சத்தம் வண்டிக்குள்ளிருந்தோர் காதில்பட வாரம்பித்தது—இத்தகைய இருள் மிகுந்த காட்டினிடையே இந்த மாட்டு வண்டியும் ஊர்ந்து சென்று கொண்டிருந்தது. வண்டிக்காரனுக்கு பயம் மேன்மேலும் அதிகரித்தது. வண்டிச் சக்கரத்துக்கு மை போடாததால் கீச், கீச் சென்று சக்கரம் சுழலும்போதெல்லாம் சத்தங்கேட்கவே, ஒருக்கால் யாராவது அயலார் அன்றித் திருடர்கள் சத்தங்கேட்டு வந்தால் என்ன செய்வதென்ற பீதியை வண்டிக்காரன் அடைந்தான். வண்டிக்குள்ளிருந்த நமது ராஜம் (ஸ்வர்ணம்) தன் கணவனை நினைத்து நினைத்து வருந்த முறுவள். தன் கணவன் தன்னை இன்னாள் என்று தெரிந்து கொண்டால் தன்னைப் பெண்டெனக் கொள்ள மறுப்பரோவென்று ஐயுறுவள். தன்னைத் தொட்டுத் தாலி கட்டியவர் தன்னை விட்டு விடுவாரா என்று எண்ணி ஒருவாறு மனதைச் சமாதானப் படுத்திக்கொள்ள முயலுவாள். "நான் என்ன ராஜம் மாதிரி தானே இருக்கிறேன். கலியாணத்தில் கூட என்னைத்தானே அவர் தாலி கட்டினார். மேலும் நலங்கிட்ட சமயம் எனது தேக உறுப்புகளையும் எனது கை, கால்களையும் முகத்தையும் நன்கு கவனித்திருக்கிறார். அந்த ஞாபகம் அவருக்கில்லாமற் போகுமா. என்னையே ராஜம் என்றுதான் நிச்சயிப்பார். மேலும் ராஜத்தை அவர் பார்த்ததில்லை. நான் ஏன் பயப்படவேண்டும்" என்று எண்ணி, எண்ணி மனதைத் தேற்றிக்கொள்ளுவாள். தன் புருஷன் சுக ஜீவியாய் நீண்டகாலம் வசிக்கவும், தன் திருமங்கல்யம் பிரகாசிக்கவும், தான் பிறந்தகத்துக்கும், தன் புக்ககத்திற்கும், முத்துவின் வீட்டுக்கும் யாதொருவித அபகீர்த்தியும் ஏற்படாமலிருக்க சர்வ சக்தி ஸ்வரூபிணியாகிய தேவியை மனதினுள்ளே துதி செய்வள். ராஜத் (ஸ்வர்ணத்) தினருகில் உட்கார்ந்துள்ள காமதுரனாகிய ராமய்யர் (நரசிங்கராயர்) பலவாறு தனக்குள் சிந்திக்கலானான். "வண்டிக்காரனுக்கு பணத்தைக் கொடுத்து ஊருக்குள் போகாது இப்பாதை வழியே திருப்பி விடச் சொன்னபடி அவனும் ஓட்டி வருகிறான். வண்டியை அவிழ்த்துப் போட்டுத் தங்க வசதியுள்ள இடம் ஒன்றையும் காணோம். இன்றிரவு இவளைச் சேராவிடில் விடிந்தவுடன் இவள் என்மீது சந்தேகப்பட்டு வேறொருவர் உதவி கொண்டு ஊர் திரும்ப முயற்சிக்கக் கூடும். மேலும் தன்னந்தனியே வந்த பிறகு இவளை என் பலாத்காரப்படுத்தக் கூடாது. அதற்கும் இசைய மறுப்பின் இவளைக் கொன்று விட்டுத் திருமப வேண்டும். இனி இவளால் என்ன செய்ய முடியும். வண்டிக்காரனோ நம் மனிதனாகி விட்டான். அவனுக்குத் தமிழ் தெரியாதாகையால் அவனுடன் அவள் பேசமுடியாது. தெலுங்கு எனது தாய் பாஷை. எனக்கு ஹிந்துஸ்தானியும் தெரியும். வண்டிக்காரனுடன் நான் மட்டுமே பேச முடியும். எங்கேயாவது அருகில் ஒரு சத்திரம் சாவடி இருக்குமானால் அங்கு தங்கி இவளுடன் சுகிக்கலாமெனக் கருதுகிறேன். மேலும் எனக்குப் பசியும் அதிகரிக்கிறது. நீட் சதர் அனுப்பியுள்ளதைச் சாப்பிட்டாவது பசியாற்றிக் கொள்ளலாம். எதற்கும் ஓர் தனி இடம் வேண்டும்? என்று தனக்குள் நினைத்து, நினைத்துப் பின்,

கண்ணே, ராஜம், என்ன ஒரே பிடிவாதமாய் என்னைக் கண்டித்துப் பேசுகின்றாயே. கொஞ்சநேரம் யோசனை செய், உன்னை உன் புருஷனிடம் சேர்க்கவில்லை யென்றால் என்னுடன் தானே நீ இருக்கவேண்டும். என்னுடன் கூடவர உடன்பட்ட நீ என்னுடன் கூடி சுகிக்கலாகாதா, கூடவர மட்டும் தைரியம்! இதற்கு மட்டும் மனமில்லையோ. இனி உன்னை விட மாட்டேன். நீதான் எனது பிரியசகி.

என்ன, மறுபடியும், மறுபடியும் ஏதேதையோ சொல்லுகிறீர். முன்னமேயே நான் முடிவாகச் சொன்னேனே. உமது புத்தி உம்முடைய ஸ்வாதீனத்தில் இல்லையோ? எனக்கு மனமிருந்தால் தானே உமது எண்ணம் நிறைவேறும். என்றாள்.

அடி, சுந்தரமே, நீ அப்படிச் சொல்லலாமோ! சிறிதேனும் யோசித்துச் சொன்னாயில்லையே. எங்கு, யாருடன் எவ்வேளையில், எந்நிலையில் பேசுகின்றாய் என்பதை மற்றுமொரு முறை சிந், தனை செய்வாய்! நீ ஒரு இளம் பெண் மணி. பதினாறு வயதான பருவம். நான் உனக்கேற்ற வாலிபப் பருவம் வாய்ந்த ஆண் சிங்கம். என் காமவலையில் சிக்குண்ட நீ எங்ஙனம் தப்பமுடியும். நீ என்மனம் போனபடி இசைந்து நடக்க மறுப்பின் இன்றிரவுக்குள் உன்னை பலவந்தப்படுத்தி, துன்புறுத்திப் பின்னர் யமபுரம் அனுப்பியும் விடுவேன்" என்று ராமய்யர் என்ற நரசிங்கராயர் பயமுறுத்தினான்.

நமது ஸ்வர்ணமும் (ராஜம் மாதிரி விவாகத்தில் நடித்தவள் என்பதை

நேயர்கள் மறத்தலாகாது) ஓரளவு கல்வி பயின்றவள் என்பதும் புத்திசாலி என்பதும், தக்க சமயத்தில் தக்கவாறு நடந்து கொள்ளும் திறமை வாய்ந்தவள் என்பதும், உலகறிந்த விஷயம். தான் இருக்கும் நிலைமையை நன்கு உணர்ந்து கொண்டாள். தன் அறிவின் முதிர்ச்சியால் அந்தக் காமதுரனை வெல்லக்கருதினுள். தன் பதிவிரதா தருமத்தைக் காப்பாற்ற வெண்ணினுள். காட்டினில் தன்னந்தனியே விடப்பட்ட தமயந்தியைப் போலவும், புருஷன் இறந்த நிலையில் தன் மனே நிலையை சிறிதும் தளரவிடாது தர்மராஜனுடன் வாது புரிந்த சாவித்திரியைப் போலவும், ராவணன் கையில் சிக்குண்டு தைரியத்துடன் கற்பு நிலையைக் காப்பாற்றிக்கொண்ட சீதையைப் போலவும், துரியோதனன் சபா மண்டபத்தில் துற்சாஸனன் துயிலுரிக்கும் சமயத்தில் பக்தி பரவசம் கொண்டு விளங்கின பாண்டவர் தரும பத்தினி துரௌபதையைபோலவும், இந்தியநாட்டு உத்தம ஸ்திரீகளைப் போலவும் தானும் இருக்க வெண்ணினுள். இனி இவனுடன் எதிர்த்து வாதாட இது சமயமல்லவென்று எண்ணினுள். இவனை இனி எவ்வாறு வஞ்சிக்கலாம் என்று ஆலோசிக்கலானுள். சில நிமிஷம் யோசித்து விட்டு,

"இதைப்பற்றி வண்டியில் பேச வேண்டாம். தனியிடத்தில் நாம் நடந்து கொள்ள வேண்டியதை வண்டிக்காரன் அறிய வண்டியில் பேசுவது கூடாது" என்று ஜாடையாக குறிப்பிட்டாள்.

"வண்டிக்காரனுக்கு நம்ம தமிழ் பாஷை தெரியாது. நீ தாராளமாகப் பேசலாம். சிற்றின்பச் சொற்களை என் மனங்குளிர மழை போன்று வருஷிப்பாய் கண்ணே!" என்ருன்.

"இதைப்பற்றிப் பேசப்பேச தங்களுடன் கூடிக்கலக்க மனம் இசைகின்றது. அப்படிச்செய்ய ஒரு தனி இடம் வேண்டும். முதலில் அதை நாடுங்கள். பின்னர் தங்களிஷ்டம்போன்று நடந்து கொள்ளுகிறேன்" என்று இனிய குரலில் விடை பகர்ந்தாள்.

இதைக் கேட்டதும் ராமய்யருக்கு உண்டான சந்தோஷத்துக்கு அளவே கிடையாது. ஸ்வர்ணத்துடன் (ராஜத்துடன்) உண்மையில் கூடிக் கலந்து சுகமெய்தியதாகவே கனவோ, நினைவோ கண்டு உள்ள மகிழ்ந்தான். தான் ஒருவனே அஷ்ட ஐஸ்வரியமும் படைத்தவனென்று தனக்குள்ளே எண்ணிவிட்டான். வண்டி ஊர்ந்து சென்று கொண்டிருக்கும் சமயம் அவள் பக்கமாக நகர்ந்து அவள் துடையில் கையைவைத்து பின் ஓரளவு உள்ளம் பூரித்தான். ஐயோ, பாவம், அவன் கைவைத்தது ஸ்வர்ணத்துக்கோ பெரிய முள் தைத்தது போன்றிருந்தது. பின்னர் கையை அவள் புஜத்தின்மீது வைத்தான் உடனே ஏதோ ஸர்ப்பம் கடித்தது போன்று அவளுக்கு உணர்ச்சி தோன்றியது. "ஏன் அவசரம். ஓரிடத்தில் தங்கி, பசியாற்றிக்கொண்டுப் பின்னர் தங்கள் மனம்போல் நடக்கலாகாதா; மேலும் தாங்களும் பசியால் மெலிந்து வாடுகின்றீர். இந்த நிலையில் சிற்றின்பம் சித்திக்குமா? பசி வந்தால் பத்தும் பறந்திடுமென்பது நீங்கள் அறியாததோ" என்று மிருது வசனங்களால் தெரிவித்துக் கொண்டாள். இதைக் கேட்டதும் ராமய்யர் மேலும் மேலும் சந்தோஷ சாகரத்தில் மூழ்கி மூழ்கி, எழுந்தான், எங்கு வண்டியை நிறுத்தலாம். எங்கு தன் எண்ணத்தைப் பூர்த்திசெய்து கொள்ளலாம் என்ற கவலை ராமய்யனைச் சூழ்ந்து கொண்டது. வண்டியும் ஊர்ந்து கொண்டே சென்றது. வண்டிக்காரனும் தூங்கித் தூங்கி விழிப்பான்.

தன்னிஷ்டம்போன்று இவள் நடக்க இசைந்து விட்டாள் என்றே ராமய்யன் தீர்மானித்து விட்டான் [இனி 'ர்' சேர்க்காமல் 'ன்' சேர்த்துப் பேசுவோம] காமவெறியை அடக்க அவனுல் முடியாமற் போயிற்று. இடந்தேடித் திரியுமட்டும் வாளாவிருக்க அவன் மனம் சம்மதிக்கவில்லை. வண்டியிலேயே அவளைக்கட்டி முத்தமிடத் தீர்மானித்து விட்டான். பலவாறுன இனிய வசன மொழிகளால் அமுதூட்டிய பாவை தன்னை நிரஸ்கரிக்க மாட்டாள் என்றும் எண்ணிவிட்டான். தன்மனம் போன்றவாறு நடக்க மறுப்பின் பலவந்தம் செய்வதென்று உறுதி செய்து கொண்டான். திரும்பவும்,

"அடி ராஜம் (ராமய்யருக்கு அவளது உண்மைப் பெயர் தெரியாது) கண்ணே, மணியே, ரத்தினமே, பெண்ணரசியே! எனக்கு ஒரு முத்தங்கொடுத்தால் தான் நீ என்மீது காதல் கொண்டிருக்கின்றனை என்பதற்கு அடையாளமாக நான் கொள்ளுவேன். சீக்கிரம் ஒரு முத்தந்தா. எனது ஹ்ருதயரத்தினமே, உன்மேல் மோகங்கொண்டு விட்டேன். என்னை மறுக்காமல் ஏற்றுக்கொள்.

இதைக் கேட்டதும் ஸ்வர்ணத்துக்கு (ராஜம்) அடங்காத கோபம் பிறந்தது. என் செய்வாள், பாவம். அவளே, ஆண்பிள்ளை. சிறிது தாமதித்து, "உம்மை நல்லவனென்றும், யோக்கியன் என்றும் இதுகாறும் கருதினேன். மேலும் முன்னதாகவே உம்மை என் சகோதரனுக பாவித்து விட்டேன். என் தந்தையாரிடத்து வாக்குக் கொடுத்தபடி நீர் என்னை என் கணவரிடத்துச் சேர்ப்பித்துவிடும் என்ருள். என்ன சொல்லியும் அவன் கேளாமல் அவள் பக்கம் நகர்ந்து அவளைக் கட்டிக்கொள்ள விரும்பினுன். உடனே,

சீ, சற்று ஒதுங்கி உட்காருடா, என்னடா புத்திகெட்டு பயித்தியம் பிடித்தவன்போல் தாறுமாருய்ப் பேசுகிருய்! எனது அருகில் உட்காராதே" என்ருள்.

"எனது ப்ரியஸகி, என்மேல் தயவு செய். சமீபத்தில் ஏதாவது மண்டபம் அல்லது சத்திரம் இருக்கும் அதில் இன்று இரவைக் கழிப்போம். எனது மாணிக்கமே! உன்னுல் ஒருயிர் பிழைத்து சுகமனுபவிக்கட்டும். என்னிடத்தில் ஐயாயிரம் ரூபாய் இருக்கிறது. எல்லாவற்றையும் உனக்கே கொடுக்கிறேன். தயவு செய்—" என்ருன்.

"என்னடா நாயே, சீ சீ-கழுதை! என்னை யாரென்று நினைக்கின்றனை. ஜாக்கிரதையாகப் பேசு என்று மிகவும்

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது.

திருநெல்வேலி ஞா. ப. சதானந்தம் அம்மாள் எழுதிய

சுந்தர காந்தம் என்னும் இனிய தமிழ் நவீனம்

வெளிவந்து விட்டது!!!

உண்மைக் காதலின் உயர்வை விளக்கிக் கண்முன் நடப்பதுபோன்று விஷயங்களைக் காட்டிச்செல்லும் இக்கதை, களைத்த மனத்தையும் களிக்கச் செய்யும். பல அறிஞரின் மதிப்புரையைப் பெற்றது. 384 பக்கம், டெம்மி அளவு அழகிய கிளேஸ் கடிதம், அழுத்தமான கட்டடம் கொண்ட இப்புத்தகத்தின் விலை ரூ. 1—0—0. தபாற் செலவு வேறு. வேண்டுவோர் இதனடியிற் கண்ட விலாசத்திற்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

ஞா. ப. சதானந்தம் அம்மாள் C/o காட்டிலாகா ரேஞ்சு ஆபீசர்,
கிருஷ்ணகிரி. சேலம் ஜில்லா.

கடு, கடுத்துக் கூறினள். “என் ரத்ன
மணியே! கிருபை செய்வாய். உன்
இன்பமான மொழிகளை இனிமைக் குர
லில் கூறுவாய். என்மேல் நீ கோபிக்க
லாமா? உனது மதுர மொழிகளைக்
காதினால் கேட்டு நான் சந்தோஷிக்கக்
கூடாதோ! தயவு செய்வாய்! என்று
பலவாறு வேண்டினன். நமது ஸ்வர்ண
மும் “ஹா, தெய்வமே, ஹே, மந்தஹா
ஸினி, ஜகத்ரக்ஷஹி, லோக நாயகி,
மனோன்மணி, புவனசுந்தரி, ஆ ஜெகதம்
பிகே ரக்ஷிக்கவேணும் எனது ப்ராண
நாயகன் ரங்கசாமி அன்றோ. என்னை
என் மனதுக்கு மாறாகக் கூடிக்கலக்க
இம்மகா பாவி பலாத்காரம் பண்ணுகின்
றானே. நீ இக்கோலத்தில் என்னைப்
பார்க்கலாமா! என்னை ரக்ஷிப்பாய்”
என்று மனதுக்குள்ளே ஸ்துதி செய்து
கொண்டிருக்கும் பொழுது, “எனது
ஹ்ருதய ரத்னமே, ஒரு முத்தந்தருவாய்,
நானும் உனக்கு மும்முறை முத்தந்தரு
வேன், என் வாக்கைத் தட்டாதே.
நானும் நல்ல யௌவன பருவத்தை
அடைந்தவன் நீயும் சமீபத்தில் பெரிய
வளாயினை. ஆதலால் நீயும் நானும் மன
மொப்பி சுகித்தல் இன்றியமையாதது”
என்று சொல்லிக்கொண்டு சடேலென
அவளைச் சமீபித்து அவளது மேல்
தாவணியை இழுத்ததும், அவள் அதிக
கோபங்கொண்டு அவன்மேல் எச்சிலைத்
துப்பி “நாயே, கழுதையே, குரங்கே,
அருகில் வராதே” என்று பலத்த குர
லில் கூறி மேலும் முன்னே நகர்ந்து
கொண்டாள்.

மேல் தாவணியை இழுக்க யத்தனித்
ததும் ஸ்வர்ணம் (ராஜம்) நகர்ந்ததும்,
ராமய்யன் முடிவில் திடீரெனத் தாவி
தாவணியை இழுத்ததுமே வண்டித்
தூக்கிப் போட்டது. மாடும் பயந்து
வேறு குறுக்குப் பாதையில் இறங்கியது.
வண்டிக்காரனும் திடுக்கென விழித்துக்
கொண்டு நாலாபக்கமும் சுற்றிப் பார்த்
தான். எங்கும் காடென்று நிச்சயித்துக்
கொண்டான். சிறிது தூரம் ஓட்டி
னான். வெகு தூரத்துக் கப்பால் மினு
மினுப் பூச்சிபோல ஒரு விளக்கு வெளிச்
சம் கண்ணுக்குத் தென்பட்டது. உண்
மையில் வண்டிக்காரனுக்கு பயம் அதி
கரித்தது. உடனே வண்டியை விட்டு
அவர்களைக் கட்டாயத்தின் மேல் இறக்கி
மெதுவாக அவன் தன் வண்டியைத்
திருப்பி விட்டான். இவ்விருவர்களும்
என் செய்வதென்று தெரியாமல் தயங்கி
நின்றார்கள். இதுகாறும் (ஸ்வர்ணம்)
ராஜம் காட்டை பார்த்ததில்லை யாத
லால் அதிகமாக பயந்தாள். இவனோ
ஊர் திரிந்து வழக்கப்பட்டவனாதலால்

யையும் தூக்கிக் கொண்டு முன்னே
செல்ல, ராஜம் தைரியத்துடன் பின்
சென்றாள். தன் விதியைப் பற்றி
நொந்துகொண்டு மிகவும் வருந்தி
அழுதுகொண்டே சென்றாள். அத்
தீபத்தை நோக்கிச்சென்று கொண்டி
ருந்தனர். தீபத்தைச் சமீபிப்பதற்கு
முன்னமேயே ஒரு குடிசையில் புகுந்த
னர் அத்தீபத்திற்கும் குடிசைக்கும் ஒரு
பர்லாங்கு தூரம்தான். தீபத்தை உற்று
நோக்கி, அங்குள்ள விசேஷத்தை கவ
னித்தாரல்லர்.

குடிசையினுள்ளே நுழைந்ததும் ஒரு
தீபத்தை மட்டும் கண்டனர். மனித
சஞ்சாரமே அக் குடிசையினில்லை மூட்
டையைக் கீழே இறக்கியதும் ராஜம்
துக்க மிகுதியாலும், பயத்தாலும் தன்
மூட்டையைத் தலைக்கு வைத்துக்
கொண்டு அயர்ந்து நித்திரை செய்தாள்.
போக்கிரி ராமய்யர், பசி தாக மிகுதி
யால், பெட்டியைத் திறந்து தீக்ஷிதர்,
அனுப்பிய தின்பண்ட மூட்டையை
அவிழ்த்து, ஒரு சிறு பாகத்தைச் சாப்
பிட்டு பக்கத்திலிருந்த கூஜா ஜலத்தில்
கொஞ்சம் பருகினான். தாக சாந்தியும்
அடங்கிற்று. ஆத்ம சாந்தியுமடங்கி,
சப்த நாடியும் ஒடுங்கிற்று. மயக்கமிகு
தியால் பெட்டியை மூடாமலும் மூட்
டையை கட்டிவைக்காமலும் அவசரமாய்
யமபுரம் ஓடினான். எனவே நமது
கதாநாயகி தனியே உண்மையான நித்
திரை புரிந்தனள்.

ராமய்யன் இறந்ததற்கு வாசகர்களு
க்கு சிமிழ் ஞாபகமிருக்கட்டும், தீக்ஷிதர்
அதனைப் பாடுபட்டு தன் மனைவியிடம்
கொடுத்தது முன் அத்தியாயத்தில் அறி
விக்கப்பட்டது ஞாபகமிருத்தல் வேண்
டும். (தொடரும்)

“வர்த்தக ஊழியனைப்பற்றி” “முரசு” சென்னை.

திருச்சியில் திரு டி. வி. கே. நாயுடு
வை ஆசிரியராகக்கொண்டு வெளிவரும்
“வர்த்தக ஊழியன்” பத்திரிகை வரப்
பெற்றோம் இதில் வியாபாரிகளுக்கு
இன்றியமையாத வர்த்தகச்செய்திகளும்
வாணிபம் முதலிய கட்டுரைகளும்
அனுபவமுள்ள பலரால் எழுதப்பெற்றி
ருக்கின்றன. தவிர ஆங்கிலத்தில் கட்டு
ரைகளும் கதை முதலியவைகளும்
சேர்ந்து இப்பத்திரிகை மிளிர்கின்றது
கைத்தொழில் வியாபாரம் முதலியவை
களைப் பற்றி தென்னிந்தியர்களுக்கு
விஷயங்கள் தெரிவிக்க இப்பத்திரிகை
வெளிவருவதைக் கண்டு சந்தோஷப்
படுகிறோம்.

போட்டிப் பரிசு
(prize competition)
“எந்த வர்த்தகத்தை ஆரம்பிப்பது.

“எந்த வர்த்தகத்தை ஆரம்பிப்பது”
என்ற விஷயமாக, கீழ்கண்ட குறிப்பு
களைக்கொண்டு வர்த்தக ஊழியன்
இரண்டு பக்கங்களுக்குள் அடங்கும்படி
யாக வியாசம் எழுதி ஜூன்-மீ 30-உ
க்குள் பத்திராதிபருக்கு வந்துசேரும்படி
யாக அனுப்பவேண்டும். முதன்மையாக
இருந்த வியாசத்துக்கு ஐந்து ரூபாயும்
இரண்டாவதாக யிருந்த வியாசத்துக்கு
இரண்டு ரூபாயும் கொடுக்கப்படும் மற்ற
வர்களுக்கு ஒரு வருடத்திற்கு பத்திரி
கையை இனாமாக அனுப்பப்படும்.

குறிப்புகள்—(1) இன்ன வியாபாரம்
(2) ஆரம்பத்தில் ஏற்படும் இடையூறுகள்
(3) எவ்விதம் அவைகளை நிவர்த்தி
செய்வது (4) வர்த்தகம் செய்பவர் நட
ந்து கொள்ளவேண்டிய வழிகள்
(5) அந்த வர்த்தகத்துக்கு என்ன புஸ்த
கங்கள் வாசிக்கவேண்டும் (6) எவ்விதம்
அந்த வர்த்தகத்தை விருத்தி செய்வது
(7) போட்டியை எப்படி சமாளிப்பது
(8) எப்படி விளம்பரம் செய்வது
(9) அதனால் கிடைக்கும் லாபம்
(10) எவ்வளவு மூலதனம்.

பத்திராதிபர்,
வர்த்தக ஊழியன்
திருச்சினாப்பள்ளி.

திருச்சி “இந்திய விவசாயம்” எழுதுவது.

திரு டி. வி. கே. நாயுடு அவர்களை
ஆசிரியராகப்பெற்று திருச்சியினின்றும்
மாதந்தோறும் வெளிவந்து உலாவும்
மாதப்பத்திரிகையாகிய “வர்த்தக ஊழி
யனை” சில மாதங்களாகப் பெற்றுவரு
கிறோம். இதைப் பார்வையிட்டதும்
சில ஆண்டுகளுக்குமுன் தஞ்சையி
னின்று திரு கோ.நடேசய்யரால் வெளி
யிடப்பட்டுவந்த “வர்த்தக மித்திரன்”
ஞாபகம் வருகிறது. அஃது போன்று
இதுவும் வர்த்தகர்களின் நிமித்தம்
தொண்டூழியம் செய்துவருமென நாம்
ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். இப்பதி
ரிகையில் வியாபாரிகளுக்கு ஏற்ற பல
விஷயங்கள் அடங்கி யிருக்கின்றன.
வியாபாரத்துணுக்குகள், ரயில்வேபகுதி
நாணயமாற்றம், இத்தியாதி விஷயங்கள்
சஞ்சிகையின் உபயோகத்தை அதிகப்
படுத்துகின்றன. வியாபாரிகள் ஒவவொ
ருவரும் இதை அவசியம் ஆதரிக்க
வேண்டியதே! இதன் வருடசந்தா ரூ. 1

ரயில்வே பகுதி.

(Railway Matters.)

கூடலூர் உதவி ஜில்லா முனிசீப் திரு. எம். எஸ். நாராயணசாமி அய்யர் மார்ச்சு மாதத்தில் திருப்பாப்புலியூர் வாழைப்பழக்கடை மனோன்மணி அம்மாள் தென்னிந்தியா ரயில்வேகம்பெனியாரிடமிருந்து தமக்கு ரூ. 229–12–0 கிடைக்க வேண்டுமென்று கொடுத்த வழக்கில் வாதிக்குச் சாதகமாக தீர்ப்புக் கூறினார்.

வாதி 31—10—30 காலை 10, 11-மணிக்குத் தாம் 4-வண்டி பச்சை வாழைத்தார்களை திருப்பாப்புலியூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு எழும்பூரில் தமது ஏஜண்டுக்கு அனுப்புவதற்காகக் கொண்டுவந்ததாகவும், ரயில்வே கட்டணம் ரூ. 25—5—0 கொடுத்து ரசீது வாங்கினதாகவும், 4—11—30ㅡ வரையில் வாழைத்தார் எழும்பூர் போகவில்லை என்றும், அப்பால் டெலிவரி ஆகையில் எல்லாம் பழுத்துக் கெட்டுவிட்டதால் டெலிவரி எடுக்கவில்லை யென்றும், அதற்குள் பட்டணம் விலையும் குறைந்துவிட்டதாகவும், இம்மாதிரி நஷ்டத்திற்கு ரயில்வே கம்பெனிதான் ஜவாப்தாரி என்றும், ஆகையால் பிரதிவாதி கம்பெனி வாதிக்கு வாழைத்தார் விலை ரூ. 200-ம் செலுத்திய கட்டணம் ரூ. 25—5—0ம், வரக்கூடியலாபம் ரூ.55ம் வட்டி ரூ. 21-ம் கொடுக்கக் கடமைப் பட்டவர்கள் என்றும் வழக்குத் தொடுத்தார்.

பிரதிவாதி கம்பெனியார் ஸ்டேட்மெண்டில் பிராது அம்சங்களை அநேகமாக மறுதளித்து, இந்தியன் ரயில்வே மகாநாடு சங்கம் ரூல் 8 பிரகாரம் இந்த ரயிலில்தான் சாமான் போகவேண்டுமென்பதற்கு உத்திரவாத மல்லவென்றும் எப்பொழுது சேருமென்பதற்கும் உத்திரவாதமல்ல வென்றும், காய் கெட்டுப் போனதற்கு ரயில்வே கம்பெனி யாதொரு விதத்திலும் ஜவாப்தாரியல்ல வென்றும், மேலும் ரிஸ்க் நோட்டு "பி" பிரகாரம் அனுப்பிய சாமான்களுக்குத் தாங்கள் நஷ்டத்திற்கு உத்திரவாதமல்ல வென்றும் தெரிவிக்கப்பட்டது.

முனிசீப் நீண்டதோர் தீர்ப்பில் கேஸின் விருத்தாந்தத்தை யெல்லாம் சொல்லிவிட்டு அடியிற்கண்டவாறு குறித்திருக்கிறார்:—

காலாவதி சம்பந்தப்பட்ட வரையில் இவர்கள் வாதத்தில் ஒன்றும் சொல்லவில்லை. கேஸ் தொடர பூர்ண அதிகாரமிருக்கிறது. முக்கியமாகக் கவனிக்க வேண்டிய தென்னவென்றால் கெடக்கூடிய சாமான்களை அனுப்புகையில் வீண் காலதாமதமாயிற்று? அந்தக் காலதாமதமானது ரயில்வே உத்தியோகஸ்தர்கள் அஜாக்கிரதையாலா? என்றுதான் கவனிக்க வேண்டும். எப்பொழுதுதான் வாகன் சப்ளை செய்யப்பட்டதென்பதற்கு அதற்காக உள்ள புத்தகத்தில் கூட்ஸ் கிளார்க்கு வாதியிடமோ அல்லது ஏஜண்டிடமோ கையெழுத்து வாங்காததிலிருந்து அவர் சாட்சியம் நம்பக்கூடியதல்ல. இம்மாதிரிகையெழுத்து வாங்காததற்கு யாதொருவித சமாதானமும் கூறமுடியாது. என்றைக்கு வாகன் சப்ளை செய்யப்பட்டதோ அந்த தேதியும் 30, 31 ஆகத் திருத்தப்பட்டிருக்கிறது. பூரா சாட்சியத்திலிருந்து 31-ந் தேதி காலையில் வாழைத்தார் சென்னைக்கு அனுப்பத் தயாராக இருந்ததென்று ஏற்படுகிறது. கெட்டுப்போகக் கூடிய சரக்கு வாதியால் கொடுக்கப் பட்டும் எப்படி நியாயமாக அனுப்புவற்கு ஏற்பாடு செய்யவேண்டுமோ அப்படிச் செய்யவில்லை. வீண்கால தாமதமாயிருக்கிறது. "பி" ரிஸ்கு நோட்பாரம் பிரகாரம் சரிவர நடக்கவில்லை. முக்கியமாக தாமபரம் ரயில்வே ஸ்டேஷன் அதிகாரிகள் சரிவர நடக்கவில்லை. இந்தக் காரணங்களைக்கொண்டு லாபத்தில் கொஞ்சம் குறைத்து அரை வட்டிப் பிரகாரமும் செலவுடனும் தீர்ப்புச் செய்கிறேன்.

* * *

எப்ரல் மாதம் 4-ந் தேதி காலை புது ஏஜண்டு மிஸ்டர் மூர்ஹெட்டும் பிரதம வர்த்தக சூபரின்டென்டெண்டு மிஸ்டா மில்லரும் திருச்சி கூட்ஸ் ஷெட்டுக்கு வந்து புதுமாதிரி "கண்டெயினர்" என்னும் பெட்டிகளில் சாமான் போட்டு சாமான் அனுப்புபவரே பூட்டுப் பூட்டி வைத்துக்கொள்ளும் விதமும், அவைகளை ஒரு சின்ன வண்டியிலிருந்து பெரிய வண்டிக்கு எடுத்து சுலபமாய் வைக்கும் விதமும் காண்பித்தார்கள். இது 6 அடி உயரமும் 152 சதுர அடி கொள்ளும் இடமும் உள்ளது. இப்போது மதுரையிலிருந்து கள்ளிக்கோட்டைக்கும் கோயமுத்தூருக்கும் சரக்கு சீக்கிரம்போக ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பல வர்த்தகர்கள் வந்து பார்த்து இதை உபயோகிப்பதில் பல நன்மைகள் உண்டு என்பதைக் கண்டு உணர்ந்தனர்.

* * *

தஞ்சைஜில்லாவிலுள்ள பற்பல ஸ்டேஷன்களிலுமிருந்து கொழும்புக்கு அரிசி ஏற்றி அனுப்புவோருக்கு அனுகூலம் செய்யும் பொருட்டுத் தென்னிந்திய ரயில்வே அதிகாரிகள் சில காலமாகவே கட்டணத்தைக் குறைப்பதுபற்றி யோசித்து வந்ததாகத் தெரிகிறது. இலங்கை கவர்ன்மெண்டு ரயில்வே அதிகாரிகள் இப்போது கட்டணங்களில் 100-க்கு 16 வீதம் மேற்கொண்டு குறைக்கச் சம்மதித்திருப்பதாகவும், பரீட்சார்த்தமாக 3 மாத காலத்துக்கு இவ்வாறு குறைக்கப்பட்டிருக்கிறதென்றும், ரயத்களுக்கும் வர்த்தகர்களுக்கும் இதன் மூலம் பரிகாரம் ஏற்படுமென்று நம்புவதாகவும், ரயில் மார்க்கமாக கொழும்புக்கு அதிகமான அரிசி ஏற்றியனுப்பப் படுமென்று எதிர்பார்ப்பதாகவும் தென்னிந்திய ரயில்வே நிர்வாகிகள் இப்போது அறிவித்திருக்கின்றனர்.

* * *

அரிசி இயந்திரச் சொந்தக்காரர்களின் தஞ்சை தென்னாற்காடு ஜில்லாக்களின் சங்கத்தின் வருஷாந்திர முதல்கூட்டம் எப்ரல் 16உ பிற்பகலில் குத்தாலத்தில் நடைபெற்றது திரு. பூண்டி சுந்திரம் ஐயர் தலைமை வகித்தார்.

சங்கத்தின் காரியதரிசி திரு கே. ராமஸ்வாமி ஐயர் தென் இந்தியா ரயில்வே கமர்ஷியல் சூப்பிரின்டெண்டை பேட்டி கண்டு பேசிய விஷயமாக விவரித்துக் கூறினார். பிறகு ரயில்வே கட்டண விஷயமாயும், 16 பர்சண்டு குறைக்கிற விஷயமாகவும், தஞ்சை ஜில்லாவிலுள்ள ரயில்வே ஸ்டேஷன்களிலிருந்து கொழும்புக்கு ரயில்வே விகிதத்தைப்பற்றியும் சம்பாஷணை நடைபெற்றது. ஆனால் விஜயம் செய்திருந்த எல்லா அரிசி இயந்திர சொந்தக்காரர் ஒரே வாக்காக 16 பர்சண்டு போதுமான படி விகிதம் குறைககப்பட்டதல்ல என்று கூறினார்கள். இதன் முடிவாகக் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப் பட்டது:—

"சர்க்காரும், தென் இந்தியா ரயில்வே அதிகாரிகளும் 16 பர்சண்டு ரயில்வே விகிதத்தை குறைத்ததற்கு இச்சங்கத்தார் வந்தனத்தைச் செலுத்துவதோடு அது போதாமலிருப்பதால் இன்னும் 9 பர்சண்டு அதிகமானக் குறைவை செய்யவேண்டும் என்றும், அதாவது மொத்தத்தில் 25 பர்சண்டு குறைவு செய்ய வேண்டும் என்றும், உள்நாட்டு விகிதத்தில் 30 பர்சண்டு பொதுவாகச் செய்யாத பக்ஷத்தில் மில் சொந்தக்காரர்கள் யாதொரு வர்த்தகத்தையாவது, காரியங்களையாவது நடத்த முடியாதவர்களாகிறார் என்று இக்கூட்டம் மிக்க பணிவுடன்தெரிவித்துக்கொள்ளுகிறது.

இதைத் தவிர மற்றும் அநேக தீர்மானங்கள் செய்யப்பட்டன. தரங்கம்பாடியில் ஓர் துறைமுகத்தை வைத்து அரிசி நெல் முதலியவைகளை ஏற்றுமதிசெய்ய எல்லாவித உதவியையும் சர்க்கார்

செய்துகொடுக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறதாக ஓர் தீர்மானம் நிறைவேறியது. சிதம்பரத்திலிருந்தும் இதர விடங்களிலிருந்தும் அரிசி முதலிய தான்யங்களை ஏற்றுமதி செய்யக்கூடிய வசதிகளைச் செய்தும், திருமுல்லைவாசலின் சமீபமாய் உள்ள உப்பனூற்றின் முகத்துவாரத்தில் குவிந்து கிடக்கும் மண் குவியலை அப்புறப்படுத்தி கிழக்குப் பிராந்திய வாய்க்கால் வழியாக பரங்கிப்பேட்டை முதலிய விடங்களினின்று வர்த்தகத்தை சவுகரியமாய் நடத்திக்கொள்ள வசதி அளிக்கும்படி சர்க்காரை கேட்டுக்கொள்ளுகிறதாயும் சீக்கிரமான சீர்திருத்தம் செய்ய வேண்டுமோயும் கோரித் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

முத்துப்பேட்டை துறைமுகத்தையும் அதிராம் பட்டிணத் துறைமுகத்தையும் திறக்கும்படி செய்து முத்துப்பேட்டை துறைமுகத்தில் கோரையாற்றின் முகத்துவாரத்தில் உள்ள மண் தூர்ந்திருப்பதை சீர்படுத்தி வசதி செய்யவும், சீக்கிரமாய் ஏற்பாடு செய்யவும் கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளுகிறது. தென் இந்தியா ரயில்வே கம்பெனியாருக்கும் தஞ்சை ஜில்லா போர்டாருக்கும் நடந்த ஒப்பந்தப்படிக்கு அகஸ்தியாம் பள்ளிக்கும் பாயிண்ட்டு கால்மீருக்கும் ரயில்பாதையை திறக்கும்படி கவர்ன்மெண்டாரை கேட்டுக்கொள்வதாய் தீர்மானிக்கப்பட்டது. மேலே குறிப்பிட்ட துறைமுகங்களில் விளைபொருள்களை ஏற்றுமதி செய்யவும் இறக்குமதி செய்யவும் விசேஷ வசதிகளை கவர்ன்மெண்டார் செய்துகொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறதாய் தீர்மானிக்கப்பட்டது. சென்ற ஒருவருடகாலமாய் சங்கத்தார்கள் செய்த வேலைகளைப்பற்றி ஓர் அறிக்கையை கார்யதரிசி படித்து அது மகா சபையினர்களால் அங்கீகரிக்கப்பட்டது. ரேட்ஸ்டிரிபியூனல்விஷயமாக கார்யதரிசி தக்க ஏற்பாடுகளைச்செய்து வழக்கு நடத்த அதிகாரம் கார்யதரிசிக்கு கொடுப்பதாக தீர்மானிக்கப்பட்டது. விளை பொருள்களை மார்க்கட்டு வைத்து சரிவர வர்த்தகம் நடத்த தக்க ஏற்பாடு செய்துவைக்கும் போர்டு விஷயம் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இவ்விஷயமாக ஓர் மெமோராண்டம் கார்யதரிசி தயாரிக்கவேண்டும் என்றும், அதில் மார்க்கட்டிங் விஷயமான வசதியைப்பற்றியும் எப்படி அதை அமைக்கவேண்டும் என்பதைப் பற்றியும், எந்த விடத்தில் வைக்கவேண்டும்என்பதையும் சங்கத்தின் அடுத்த பொதுக்கூட்டத்தில் ஆஜர்செய்யவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

தூத்துக்குடி
இந்திய வர்த்தக சங்கம்.

தூத்துக்குடி இந்திய வர்த்தக சங்கத்தின் நிர்வாகக் கமிட்டிக்கூட்டம் ஜனப் எ. எம். என். எம் அப்துல்காதர் சாகிப் தலைமையின் கீழ் சென்ற மாதம் நடந்தது. கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதுடன் நிறைவேறின:—இந்தியா கவர்ன்மெண்டார் உண்டியல்களுக்கு ரத்து செய்திருந்த ஸ்டாம்பு தீர்வையை விதிக்கக் கொண்டு வந்த பிரேரணை இந்தியா சட்டசபையில் தள்ளுபடி செய்தது சரியென்று கருதுவதுடன் வேறு எவ்விதத்திலும் அதை அமுலுக்குக் கொண்டுவரக் கூடாதென்று கவர்ன்மெண்டைக்கேட்டுக் கொள்ளுகிறது. (2) ஜப்பான் தேசத்திலிருந்து மிகவும் குறைந்தவிலைக்கு இந்தியாவில் இறக்கு மதியாகும் கணக்கற்ற ஜவுளிகளினாலும் இதரசரக்குகளினாலும் இந்தியாவில் நெசவு இன்னும் மற்றைய கைத்தொழில்களுக்கு நேரிட்டிருக்கும் கெடுதிகளை உத்தேசித்தும் தற்சமயம் ஜவுளி இறக்குமதியின் பேரிலும் இருந்து வருகிற தீர்வையை வேண்டிய அளவு இந்தியா வியாபாரத்திற்கும் கைத்தொழிலுக்கும் போதுமான பாதுகாப்பு கொடுக்கும்படி இந்தியா கவர்ன்மெண்டை வேண்டிக்கொள்ளுகிறது. (3) இந்தியா சட்டசபையில் ஸ்ரீமான் கயாப்பிரஸாத் சிங் கொண்டு வந்த கதர் மசோதாவைப்பற்றி அபிப்பிராயம் கொடுக்கும்படி சென்னை கைத்தொழில் டைரக்டர்களுடைய கடிதத்திற்கு மேற்படி மசோதாவை யாதரித்து பதிலெழுதும்படி தீர்மானிக்கலாயிற்று. (4) 1930-ம் வருஷம் கூடப்பெற்ற கப்பல் வர்த்தகச் சங்கம் யாதொருவிதமான முடிவிற்கும் வராததால் அதன்மேல் இந்தியா கவர்ன்மெண்டார் சுதேச கப்பல் தொழிலை விர்த்தி செய்யவேண்டும் ஸாதனங்களைக் கைக்கொள்வது இந்தியா கவர்ன்மெண்டையேசுமந்ததாகுமென்று பரிஷ்காரமாக வாக்குக் கொடுத்திருந்தும் அவர்கள் நாளதுவரை யாதொரு விதமான ஏற்பாடுகள் செய்யாமலிருப்பதைப்பற்றி இந்தியன் சேம்பர் ஆப்காமர்ஸ் வருந்தாமலிருக்க முடியவில்லை. மேலும் தற்சமயம் பிரிட்டிவ்ஷ் கம்பெனியார் இந்தியக் கம்பெனிகளுடன் போட்டிப்போட்டுத்தங்கள் கப்பல் கேள்வுகளைக் கண்டபடி குறைத்துக்கொண்டு வருவது கடைசியாய் இந்தியக் கப்பல் வர்த்தகத்தைத்தலையெடுக்க வொட்டாமல் அடியோடுதொலைத்து விடுமாதலால் இவ்வாறு நேரிடாதபடி தாமதமின்றி வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்ளும்படி கவர்ன்மெண்டார் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இதற்கு கப்பல் வர்த்தகஞ் செய்யும் 27 முக்கிய தேசங்களில் தற்போது நடந்துவருகிறபடியும் கவர்ன்மெண்டாரால் இவ் விஷயமாய் ஆராய்ச்சி செய்வதற்காக நியமிக்கப்பட்ட கமிட்டியாரால் சிபார்சு செய்யப்பட்டபடியும் இந்தியக் கடலோர வியாபாரத்தை இந்தியக் கப்பல்களுக்காக ஒதுக்கி வைப்பதே அதிக அனுகூலமான வழியென்று தெரிகிறது. இந்தியக்கப்பல்கள் இந்தியாவிற்கப்பாலும் சென்று இதர நாடுகளுடன் நடந்துவரும் வியாபாரத்திலும் பங்கெடுத்துக்கொள்வதற்கு வேண்டிய அவசியமான ஏற்பாடுகள் செய்யவும் இந்தியர் கப்பல் என்ஜினியர்களாவதற்கு வேண்டிய சௌகர்யங்களை இந்தியாவிலேயே செய்து கொடுக்கவும் வேண்டுமென்று கவர்ன்மெண்டார் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்தியாவில் வரப்போகும் கவர்ன்மெண்டார் இந்திய வியாபாரமும் கைத்தொழிலும் வளர்ச்சி பெற்று முன்னேற்றமடையத் தாங்கள் எவ்விதமான முறைகளைக் கையாளவேண்டுமென்று அவர்களுக்குத் தெரிகிறதோ அவற்றையே கையாள அவர்களுக்குப் பூர்ண சுதந்திரம் இருக்கவேண்டுமென்றும், 3-வது லண்டன் மகாநாட்டில் இது விஷயமாய் ஆலோசனை செய்த கமிட்டியார் சிபார்சு செய்தபடி இந்த நாட்டார் சம்மந்தப்பட்டமட்டில் அவர்களுக்குப்பாது காப்பு இருக்குமானல் இந்திய வியாபாரமும் கைத்தொழில் நசுக்குண்டு போகுமாதலால் அப்படி பாதுகாப்புகள் இருக்கப்படாதென்றும் தெரிவித்துக்கொள்கிறார்கள். மேற்படி தீர்மானமானது இந்தியா கவர்ன்மெண்டுக்கும் டில்லிஐக்கியவர்த்தக சங்கத்திற்கும் அனுப்பப்பட்ட தாகத் தெரியவருகிறது.

சென்னையில்
ஏஜண்டுகள் தேவை.

“வர்த்தக ஊழியன்” பத்திரிகைக்கு சந்தாதாரர்கள் சேர்க்கவும், விற்கவும், விளம்பரங்கள் சேகரிக்கவும் செல்வாக்குள்ள ஏஜண்டுகள் சென்னையில்தேவை.

மானேஜர் “வர்த்தக ஊழியன்”
திருச்சினாப்பள்ளி.

அறிவிப்பு.

வர்த்தகம், கைத்தொழில் முதலானவைகளைப்பற்றி வியாசங்கள் பத்திராதிபருக்கு எழுதியனுப்பினல் பிரசுரிக்கப்படும். நல்ல வியாசங்களுக்கு தகுந்தாப்போல் சன்மானம் கொடுக்கப்படும். வர்த்தக ஊழியன் ஒரு பக்கத்திற்குள் அடங்கும்படியாக எழுதியனுப்ப வேண்டும்.

சாமான்களுக்கு ரயில்வே சார்ஜுகள். (RAILWAY RATES)

சாமான்கள்	எங்கிருந்து	எந்த இடத்துக்கு	ரேட்டு மணங்குக்கு அ.	பை.	எந்ததேதியிலிருந்து	ஷரா
நிலக்கரி தூள்	நாகபட்டணம்	சைதாபேட்டை	3	0	15—4—33	
கருவாடு	பெரோக்	அங்காடிபுரம்	2	0	1—5—33	
,,	,,	மெலட்டூர்	2	0	,,	
,,	,,	நிலாம்பூர் ரோடு	2	0	,,	
,,	,,	துவ்வூர்	2	0	,,	
,,	,,	வாணியம்பலம்	2	0	,,	
,,	பார்ப்பனங்காடி	அங்காடிபுரம்	2	0	,,	
,,	,,	மெலட்டூர்	2	0	,,	
,,	,,	நிலாம்பூர் ரோடு	2	0	,,	
,,	,,	துவ்வூர்	2	0	,,	
,,	,,	வாணியம்பலம்	2	0	,,	
,,	தானூர்	அங்காடிபுரம்	2	0	,,	
,,	,,	மெலட்டூர்	2	0	,,	
,,	,,	நிலாம்பூர் ரோடு	2	0	,,	
,,	,,	துவ்வூர்	2	0	,,	
,,	,,	வாணியம்பலம்	2	0	,,	
,,	திரூர்	அங்காடிபுரம்	2	0	,,	
,,		மெலட்டூர்	2	0	,,	
,,		நிலாம்பூர் ரோடு	2	0	,,	
,,		துவ்வூர்	2	0	,,	
,,		வாணியம்பலம்	2	0	,,	
சிண்டர்	ஒலவக்காடு	கோயம்புத்தூர்	1	6	1—4—33	30—9—33 முடிய
செங்கல்	எடக்குளம்	கள்ளிக்கோட்டை	1	0	1—4—33	
வாழைப்பழம்	எலமனூர்	எழும்பூர்	6	0	,,	
,,	கரூர்	,,	6	7	,,	
,,	குளித்தலை	,,	6	2	,,	
,,	லாலாபேட்டை	,,	6	3	,,	
,,	மாயனூர்	,,	6	5	,,	31—3—34 வரையில்
,,	பெருகமணி	,,	6	0	,,	
,,	புகளூர்	,,	6	9	,,	
,,	திம்மாச்சிபுரம்	,,	6	3	,,	
,,	திருச்சி கூடுஸ்	,,	5	9	,,	
தான்யங்கள்	விருதுநகர்	மதுரை	1	1	20—3—33	
,,	,,	பசுமலை	1	1	,,	
வைக்கோல்	சோளவந்தான்	கோட்டையூர்	2	8	1—4—33	
வெல்லம்	ஆழ்வார் திருநகரி	கூடலூர்	6	5	27—3—33	
,,	ஈரோடு	,,	5	8	,,	
,,	கீழகடயம்	,,	6	5	,,	
,,	மங்கரை	,,	7	3	,,	
,,	ஒட்டபாலம்	,,	7	4	,,	
,,	பாலக்காடு	,,	7	3	,,	
,,	பரலி	,,	7	3	,,	
,,	பாவூர் சத்திரம்	,,	6	4	,,	
,,	பெருந்துறை	,,	5	10	,,	
,,	திருநெல்வேலி	,,	6	3	,,	
,,	திருச்செந்தூர்	,,	6	7	,,	
,,	திருவனந்தபுரம்	,,	7	2	,,	
,,	தூத்துக்குடி	,,	6	3	,,	
,,	ஊத்துக்குளி	,,	6	1	,,	
கிரோசின் எண்ணே	சோரனூர்	அங்காடிபுரம்	1	5	1—5—33	
	,,	செருக்காரா	1	4	,,	

ஓர் வேண்டுகோள்.

வர்த்தக ஊழியன் முதல்வருடம் பூர்த்தியாகிறபடியால் சந்தாதாரர்களும் இன்னும் மற்றவர்களும், அவரவர்களுடைய சந்தா, நன்கொடை பாக்கியை, தயவு செய்து சீக்கிரம் அனுப்பி வைக்கும்படியாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மானேஜர்.

வர்த்தக ஊழியன்

திருச்சினாப்பள்ளி
1933-௵ மே-மீ

இங்கும் அங்கும்.

(Here & There)

இந்தியாவில் வர்த்தகம் செய்பவர்களில் பெரும்பாலோர் இந்தியர்களும், ஐரோப்பியர்களும். இவர்கள் வர்த்தகத்தை எவ்விதம் விருத்தி செய்வதென்பதைப்பற்றி கவனிக்கவும், தங்கள் தங்களுக்கு வேண்டிய பாதுகாப்புகளை தேடிக்கொள்ளவும், தனித்தனியாக வர்த்தக சங்கங்கள் ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றார்கள். இவ்வருடம் ஜனவரிமாதக் கடைசியில் கல்கத்தாவில் ஐரோப்பிய வர்த்தக சங்கங்களின் மகாநாடு கூடியது. அம்மகாநாட்டை வங்காள கவர்னர் திறந்து வைத்தார். இந்திய கவர்ன்மெண்டுநிர்வாக அங்கத்தினர்களில் சிலர் பிரசன்னமாகி யிருந்து, கவர்ன்மெண்டாரின் மனோபாவங்களை எடுத்துச் சொன்னார்கள். இந்திய வர்த்தகசங்கங்களின் மகாநாடு ஏப்ரல் மாதம் மத்தியில் டெல்லியில்கூடியது. இந்தியகவர்ன்மெண்டின் தலை நகரத்தில் கூடியிருந்தும், கவர்ன்மெண்டு நிர்வாக அங்கத்தினர்கள், ஐரோப்பிய வர்த்தக சங்கங்களின் மகாநாட்டில் பிரசன்னமாகி அபிப்பிராயங்களை தெரிவித்தது மாதிரி, தெரிவிக்கவில்லை. தன்கையே தனக்கு உதவி யென்ற பழமொழிப்போல் இந்திய வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகளே கூடி வர்த்தகர்களுக்குஏற்பட்டிருக்கும்குறைகளை தீர்மானங்கள் மூலமாக நிவர்த்தி செய்துகொள்ள நேரிட்டது. தீர்மானங்களின்மேல் பேசுகையில் பிரதிநிதிகள் வெகு ஆணித்தரமாக, அவர்களுடைய அனுபவங்களை எடுத்துச் சொல்லியிருப்பதையும், கவர்ன்மெண்டாரும்மற்றவர்களும் ஊன்றி கவனிப்பார்களென்று எதிர்பார்க்கிறோம்.

வர்த்தகர்களுக்கு எப்பொழுதும் ஆபத்தைக் கொடுத்துக்கொண்டு வருவது வரிப் பளுவுதான். இவ்விஷயத்தைப்பற்றி ஐரோப்பிய வர்த்தக சங்கத்தாரும், இந்திய வர்த்தக சங்கத்தாரும், இருவர்களும் தங்கள் தங்கள் மகாநாடுகளில் விரிவாகப் பேசி, வரிப் பளுவை குறைக்க வேண்டுமென்று தீர்மானங்கள் செய்திருப்பதை, கவர்ன்மெண்டார் கவனிப்பார்களென்று நம்புகிறோம்.

மேலும் வருமான வரியைக் குறித்து இந்திய வர்த்தக சங்கங்களின் மகாநாட்டில், (1) வருமான வரிசம்மந்தமாக இப்போது விதிக்கப்பட்டிருக்கும் சர்சார்ஜையும் உபரி வரியையும் அடியோடு எடுத்துவிட வேண்டுமென்றும் (2) இப்பொழுதுள்ள வருமானவரி விகிதத்தையும் உபரி விகிதத்தையும் கூடியவரைக்கு குறைக்க வேண்டுமென்றும். (3) இப்போது 1000 ரூ. வருமானத்துக்கும் வரி விதிப்பதைவிட்டு 2000 ரூபாய் வருமான முள்ளவர்களுக்கே வரி விதிக்க வேண்டுமென்றும், (4)ஒரு வருடத்தில் நஷ்டம் ஏற்பட்டால் அதை ஈடுசெய்ய பின்னால் அடுத்த மூன்று வருடங்களில் கிடைக்கும் லாபத்தைஉபயோகித்துக்கொள்ள அனுமதி யிருக்கும்படி வருமான வரி சட்டத்தை திருத்தவேண்டுமென்றும் (5) வருமான வரி சம்மந்தமான அப்பீல்களை பக்ஷபாதமற்ற விசாரணை கோர்ட்டார் விசாரிக்க வேண்டுமென்றும் தீர்மானம் நிறைவேற்றி யிருக்கின்றார்கள்.

இது எவ்வளவு முக்கியமான தீர்மான மென்பதை வருமான வரியில் கஷ்டப்படுபவர்கள் அறிவார்களே யன்றி மற்றவர்கள் அறியமாட்டார்கள். இந்த வருமான வரியானது அடிக்கடி உயர்ந்து கொண்டே போகின்றது. வர்த்தகத்தில் செழித்தோங்கும் மற்ற நாடுகளில் இவ்வளவு உயர்ந்த வருமானவரி கிடையாது. வர்த்தகர்களால் கவர்ன்மெண்டுக்கு ஏராளமான வருமானம் பலவழிகளில் கிடைத்துக்கொண் டிருக்கின்றது. அவ்விதமாக யிருந்தும் கவர்ன்மெண்டார் வர்த்தகர்களை மேலும் மேலும் நசுக்கிக்கொண்டிருக்கலாமா? இவ்விதமாக சிலகாலஞ்சென்றால் வர்த்தகர்கள் பாடு அதோகதியாகப் போய்விடு மென்பதில் ஆக்ஷேபணையிருக்காது.

வர்த்தகர்கள் இந்தியாவில் வர்த்தகம் செய்தால் பல கஷ்டங்களுக்கு ஆளாக வேண்டியதாக யிருக்கிறதே யென்று, அன்னிய நாடுகளுக்கு தங்களுடைய மூலதனங்களை அனுப்பி வர்த்தகம் செய்யலாமென்று எண்ணினாலும் அங்கு கிடைக்கும் லாபத்திற்கும் வருமானவரி விதிக்கப்படு மென்றும், சென்ற மாதம் இந்தியசட்டசபையில், சட்டம் நிறைவேற்றி யிருக்கின்றார்கள். ஆகையினால் வர்த்தகர்களுக்கு போக்கிடம்தான் எங்கே? வர்த்தகர்கள் இவ்விஷ

சிறுமணித்திரள்.
(Notes.)

வர்த்தக பிரதிநிதி.

இந்தியாவுக்கு புதிய சீர்திருத்தம் கொடுப்பதை முன்னிட்டு நியமித்திருக்கும் பார்லிமெண்டு கூட்டு கமிட்டிக்கு கவர்ன்மெண்டாரால், வர்த்தகர்களின் பிரதிநிதியாக சர் புருஷோத்தம் தாஸ் தகூர்தாஸ் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார். கவர்ன்மெண்டு செலவில் அவர் இங்கிலாந்து செல்கின்றார். இவர் வர்த்தகர்களின் நலங்களை கவனித்து வருவாரென்று நம்புகிறோம்.

ஜப்பான் பூச்சாண்டி.

இந்தியாவிற்குள் அதிகமாக சரக்குகளை இறக்குமதியாகாமலிருக்கும் பொருட்டு தடை செய்ய நிறைவேற்றபட்ட மசோதா ஜப்பானுக்குதான் அதிகமாக பாதிக்குமென்று ஜப்பான் தேசத்து வர்த்தகர்களுக்கு தெரிந்து ஜப்பான் வர்த்தகர்கள் இந்திய பருத்தியை வாங்காமல் பஹிஷ்காரம் செய்யவேண்டுமென்று யோசனை செய்து வருவதாக தெரிகிறது. இந்தியாவில் விளையும் பருத்தி வெளிநாடுகளுக்கு செல்லாமல் இந்தியாவிலேயே உபயோகப்படுத்திக்கொள்ள ஏற்ற தருணம் கிடைத்திருப்பதை இந்திய மில்காரர்கள் கவனித்து ஜப்பான் வர்த்தகர்களுடைய சாண்டியை உதாசினம் செய்வார்களென்று எதிர்பார்க்கிறோம்.

யங்களையெல்லாம் கவனித்து, மகாநாட்டில் பதவிகளுக்காக சண்டை போட்டுக்கொண்டு மகாநாட்டிலிருந்து பிரிந்து வெளியில் போனதுபோல் இனியும் நடந்துகொள்ளாமல், எல்லோரும் ஒற்றுமையாகயிருந்து வர்த்தகர்களின் அபிவிருத்திக்காக உழைப்பார்களென்று எதிர்பார்க்கிறோம். கவர்ன்மெண்டாரும் ஐரோப்பிய சங்கங்களை ஒரு மாதிரியாகவும், இந்திய சங்கங்களை வேறாகவும் பாராட்டாமல், இந்திய கவர்ன்மெண்டு அங்கத்தினர்களும் மற்றவர்களும் இந்திய வர்த்தக சங்கங்களின் மகாநாட்டிலும் கலந்துகொண்டு அவர்களுக்கும் வேண்டிய உதவிகளைச்செய்வார்களென்று எதிர்பார்க்கிறோம்.

மற்றொரு ஆபத்து.

ஜப்பான் தேசமானது வர்த்தகத்துறையில் இந்தியாவை கொள்ளையடித்துக்கொண்டுபோக வேண்டுமென்று பலவித எண்ணங்களுடன் வேலை செய்து கொண்டு வருவதை ஜப்பான்வர்த்தக வளர்ச்சியை கவனித்துக்கொண்டு வருபவர்களுக்கு மட்டும் தெரியும். ஜப்பான் பேன் மேலும் அதனுடைய வர்த்தகத்தை எவ்வாறு அபிவிருத்தி செய்யவேண்டுமென்ற எண்ணத்திலே கண்ணும் கருத்துமாகயிருந்துவருகிறது. சமீபத்தில் ஒரு புதிய யோசனையில் இறங்கி அதை அமலுக்குகொண்டுவரவும் தீர்மானித்து விட்டது. அதாவது கடலோரமாக கப்பல் வர்த்தகம் செய்வதே. ரங்கூனிலிருந்து பம்பாய்க்கு அரிசி கப்பலில் கொண்டுவர இந்திய கப்பல் கம்பெனிக்காரர்கள் டன்ஒன்றுக்கு ரூ. 10—8—0 வீதம் விதித்து வந்தார்கள். இந்த வர்த்தகத்தை ஜப்பானியர் பிடித்துக்கொள்ள எண்ணி டன் ஒன்றுக்கு 5 ரூபாய் வீதம் சார்ஜ் விதிக்க ஏற்பாடு செய்து விட்டார்கள். இதனால் அரிசி ஜப்பான் கப்பல் கம்பெனிக்காரர்களுக்கு அதிகமாக கிடைக்குமென்பதில் ஆக்ஷேபனை யில்லை. இந்திய கப்பல்கம்பெனிக்காரர்கள் இந்த போட்டியையும் சமாளிக்க அவர்களுக்குள் ஒப்பந்தம் செய்துகொள்ளப் போவதாயும் ஜப்பான் கப்பல் கம்பெனிகாரர்களுடன் எதிர்த்து நிற்கப்போவதாயும் தெரிகிறது. விடா முயற்சியுடன் ஒத்துழைத்தால் ஜெயம் பெறலாமென்பதற்கு ஆக்ஷேபனை யிருக்காது. ஆகையினால் இந்தியர்கள் ஒற்றுமையாகயிருந்து காரியத்தை செய்யும்படிக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

வர்த்தக மேயர்.

OFFICE OF THE REGISTRAR 13 JUN 1933

சென்னை முனிசிபல் கார்ப்பரேஷன் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட செட்டிநாட்டு குமார ராஜா அவர்களுக்கு மேயர் பதவி அளித்ததற்காக கவர்ன்மெண்டை பாராட்டுவதுடன் வர்த்தகர்களில் ஒருவருக்கு மேயர் பதவி கிடைத்ததற்கு நமது மனமார்ந்த சந்தோஷத்தை அவருக்கு தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ரஷ்யாவுக்குப் பதட்டமேன்?

கிரேட் பிரிட்டனுக்கும் ரஷ்யாவுக்கும் இருந்து வந்த வர்த்தக ஒப்பந்தம் ஏப்ரல் மாதம் 26வ முதல் மாறுதலடைந்து கீழ்கண்ட சாமான்கள் கிரேட் பிரிட்டனுக்குள் வராமல் தடுக்கப்பட்டிருக்கிறது. வெண்ணை, கோதுமை, பார்லி, ஓட், மெயிஸ், கோழிகள், பருத்தி, பெட்ரோலியம், எண்ணை, மரமும், மரசாமான்களும். இந்த உத்திரவினால் ரஷ்யாவின் உற்பத்தி சாமான்களில் 100-க்கு 80-பாதிக்கப்படும். இதற்கு போட்டியாக ரஷ்யா கவர்ன்மெண்டார் தடை உத்திரவு பிறப்பித்திருக்கின்றார்கள். அதில் குறிப்பிட்டிருப்பதாவது:—"கிரேட் பிரிட்டனில் சாமான்களுக்கு ஆர்டர் செய்வதும், சாமான்கள் வாங்குவதும் தடுக்கப்பட்டிருக்கின்றன. பிரிட்டிஷ் கொடி தாங்கிய கப்பல்களை சாமான் ஏற்றுவதற்காக உபயோகிப்பதும் தடுக்கப்பட்டிருக்கிறது. சோவியத் ராஜாங்கத்தின் வழியாக செல்லக்கூடிய பிரிட்டிஷ் சாமான்கள் மீதும் தடை நிர்ப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தருவித்த சாமான்களை திரும்ப வேறிடங்களுக்கு ஏற்றுமதி செய்யும் ஸ்தாபனங்களும் கூடுமான வரையில் பிரிட்டிஷ் துறைமுகப் பட்டணங்களை உபயோகிக்காமலிருக்க உத்திரவாகியிருக்கிறது." சோவியத் கவர்ன்மெண்டார் எதிர்ப்புநிற்குமா?

புதிய கடன்.

கவர்ன்மெண்டார் புதிதாக வாங்கப் போகும் கடன் விபரங்களைப் பிரசுரம் செய்திருக்கின்றார்கள். இந்த கடனில் இரண்டுவித சௌகரியங்களிருக்கின்றன. ரொக்கமாக கொடுத்து கடன் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம். அல்லது முன் வாங்கியிருக்கும் கடன் பத்திரங்களையும் தற்கால கடனுக்கு மாற்றிக் கொள்ளலாம். ஆகையினால் வர்த்தகர்களும் இன்னும் மற்றவர்களும் நல்ல சமயத்தை நழுவவிடாமல் அவரவர்கள் சக்திக்கு தகுந்தாப்போல் கடன் பத்திரங்களை வாங்கிக்கொள்வார்களென்று எதிர்பார்க்கிறோம்.

இலங்கைக்கு வக்காலத்து.

இலங்கையுடன் இந்தியா வர்த்தக விஷயத்தில் மிகவும் ஒத்துழைத்து வருகின்றன. இந்தியாவிலிருந்து இலங்கைக்கு சுமார் 800 லட்சம் ரூபாய் பொறுமான சரக்குகள் ஏற்றுமதி செய்து அனுப்பியிருக்கின்றது ஆனல் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட சரக்குகளின் மதிப்பு சுமார் 150 லட்ச ரூபாய் இலங்கையில்பலபொருள்கள் விளைகிறதென்றும் அவைகளை இந்திய மார்க்கட்டுகளுக்கு அனுப்பி வர்த்தகத்தை விருத்தி செய்யவேண்டுமென்றும் இலங்கை கவர்ன்மெண்டார் மிகுந்த ஆசையுடனிருக்கின்றார்கள் அதற்கு சாதகமாக இந்திய கவர்ன்மெண்டார் இலங்கை பொருள்களுக்கு குறைந்தவரி விதிக்க வேண்டுமென்று எதிர் பார்க்கின்றார்கள். மேலும் இலங்கையில் பெரும்பாலும் வர்த்தகர்களாகயிருப்பவர்களும் இந்தியர்களென்றும் வர்த்தகத்தினல் கிடைக்கும் லாபம் இந்தியாவுக்கு திரும்பிவந்து சேருகிறதென்றும் ஆகையினல் இலங்கை சரக்குகளுக்கு வரிவிதிப்பதில் இந்திய கவர்ன்மெண்டார் சலுகை காட்டவேண்டுமென்றும் இலங்கை கவர்ன்மெண்டு வர்த்தக இலாகாமந்திரி திரு. பெரிசுந்தரம் அகில இந்திய வர்த்தக மகாநாட்டில் பேசியிருப்பதை இந்திய கவர்ன்மெண்டார் கவனிப்பார்களென்று எதிர்பார்க்கிறோம்.

தலை தூக்காதே.

இந்திய வர்த்தகத்திற்கே மிகவும் இடையூறு செய்து வந்த அன்னியநாட்டு சரக்குகளை தலையெடுக்கவொட்டாமல் தடுக்க இந்திய சட்டசபையில் தடை மசோதா (Anti Dumping Bill) நிறைவேற்றியிருப்பதை எல்லோரும்வரவேற்பதுடன்இந்த சட்டத்தைக் கொண்டுவந்த வர்த்தக மெம்பரை எல்லோரும் போற்ற கடமைப்பட்டிருக்கின்றார்கள். இந்த சட்டமானது பொதுவாக அன்னிய தேசங்களிலிருந்து அபரிமிதமாக இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்து இந்தியாவில் இந்திய சரக்குகளுடன் போட்டி போடாமல் செய்ய ஏற்பட்டதேயன்றி ஜப்பான் தேசத்து சரக்குகளுக்கு மட்டும் அமுலிலிருக்குமென்ற கருத்தே கிடையாது. ஆகையினல் சரக்குகளுடன் எந்த தேசமாவது போட்டி போட்டால் கட்டாயம் கவர்ன்மெண்டார் ஏராளமான வரிவிதித்து நசுக்கிவிடுவார்களென்பது நிச்சயம் கவர்ன்மெண்டாரும் நிதானமாக வரி விதிக்க பிரிவுகளும் சட்டத்தில் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றது. கவர்ன்மெண்டார் அன்னிய சரக்குகளின் மேல் புதிதாக வரிவிதித்தால் இந்த சட்டப்படி இந்திய சட்டசபைகளின் அங்கீகாரம்பெற வேண்டும். சட்டசபை இரண்டு மாதங்களுக்குள் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், அல்லது தள்ளிவிட்டாலும்,புதிதாய்விதிக்கப்பட்டவரி அமுலிலிருக்க முடியாது. ஆனல் இந்த சட்டம் 1935-ஞு மார்ச்சு மாதம் வரையில் செல்லும். இம்மாதிரியான சட்டம் கிரேட்பிரிட்டனிலும் கனடாவிலும், ஆஸ்திரேலியாவிலும்,அமுலிலிருந்து வருகிறது.

மான்செஸ்டர் நூற்போர் ஐக்கிய சங்கத்தின் பொதுக் கமிட்டி வெள்ளியின் விலையை உயர்த்த உடனே ஸர்வதேச நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. வெள்ளி விலையுயர்ந்தால் ஜவுளி வியாபாரம் தலைதூக்குமென்று கமிட்டி கருதுகிறது.

வர்த்தகக் குறி வழக்கு.

நாகை வக்கீல் திரு. கே. சௌந்திரராஜலு நாயுடு தமது கக்ஷிக்காரரான நாகை எடத்தெருவிலிருக்கும் ஒரு சுருட்டு கிடங்குச் சொந்தக்காரரான திரு. பெரியதம்பி பிள்ளை என்பவரின் சார்பாக இவ்வூர் ஜில்லா முன்சிப் முன் சுருட்டு வியாபாரி திரு ராமசாமிக் கோனர் மீதும், அவருடைய மைனர் மகனை கோவிந்தசாமி கோனர் பேரிலும் ஒருவழக்குத் தொடர்ந்திருக்கிருர். வழக்கு என்னவென்ருல் மனுதார் வெகுகாலமாக போட்டோ மார்க்கு சுருட்டு என்பதைச் செய்து வியாபாரம் செய்து வருகிருர். அது நன்ருக விருப்பதால் விசேஷக் கியாதி பெற்றுமிருக்கிறது. 1929-ம் வருஷத்தில் இது தென்னிந்தியா சேம்பர் ஆப் காமர்விஸ் ரெஜிஸ்டரும் செய்யப்பட்டிருக்கிறது. பிரதிவாதி வாதியின்பேரில் எரிச்சல் கொண்டு அவரால் தயாரிக்கப்படும் மட்டமான சுருட்டை போட்டோ மார்க்குச் சுருட்டைப்போல் தோன்றும்படியாகத் தயாரித்து ஜனங்கள் போட்டோ மார்க்குச் சுருட்டேதான் என்று ஏமாந்து வாங்கித் தன்னுடைய சுருட்டின் மதிப்புக் குறைந்து விடும்படியாகச் செய்து வருகிருராம். இதனல் வாதியின் சுருட்டின் மதிப்புக் குறைந்து அதிக வியாபாரமில்லாமல் வாதிக்கு அதிக நஷ்டமேற்படுகிறது. ஆகையால் வாதி பிரதிவாதியை அவர் இப்பொழுது உபயோகித்து வரும் டிரேட் மார்க்கையும், போட்டோ மார்க்குச் சுருட்டுக்களின் நகல்களையும் உபயோகிக்கக் கூடாதென்று சாசுவதத் தடை யுத்திரவு தரவேண்டுமென்றும் வழக்கு முடியும் வரையில் தற்காலீகத் தடை யுத்திரவு கொடுக்க வேண்டுமென்றும், நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்றும் வேண்டிக் கொண்டிருக்கிருர்.

இங்கிலாந்தில் சென்ற பிப்ரவரிமாதத்தில் இறக்குமதிகளின் கிரயம் 43,077,000 பவுன், மார்ச்சு மாதத்தில் 56,346,000 பவுன், பிப்ரவரியின் ஏற்றுமதிகளின் கிரயம் 27,928,000 பவுன், மார்ச்சு மாதத்தில் 32,501,000 பவுன். சென்ற மாதத்தில் உணவுப் பொருள்கள்: பானங்கள், புகையிலை ஆகியவைகளே இறக்குமதியில் அதிகப்பட்டன. ஏற்றுமதி அதிகப்பட்டதற்குக் காரணம் தொழிற்சாலைகளில் செய்யப்படும் சாமான்கள் அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட்டதேயாகும்.

வியாபாரத் துணுக்குகள்.

(*Trade Tit Bits.*)

இந்தியா கவர்ன்மெண்டு வியாபார இலாகா அங்கத்தினர் ஜப்பானிய போட்டியைத் தடுக்க மசோதா ஒன்றைக் கொண்டுவர இன்று இந்தியா சட்ட சபையின் அநுமதியைக்கோரினார். “1933-ம் வருஷ கைத்தொழிலில் பாதுகாப்புச்சட்டம்” என இதற்குத் தலைமைப்பட்டிருக்கிறது 1935ம் வருஷம் மார்ச்சு மாதம் 31ந் தேதிவரை இது அமுலில் இருக்கும். இந்தியாவுக்கு வெளியில் உற்பத்தி செய்யப்படும் ஒரு சரக்கு பிரிட்டிஷ் இந்தியாவில் மிக்க குறைந்த விலைக்குத் தருவிக்கப்பட்டு இந்தியக் கைத்தொழிலுக்கு அதனால் பாதகம் ஏற்படுவதாகத் தெரிந்தால் சபையோடு கூடிய கவர்னர் ஜனரல் கெஜட்டில் ஒரு அறிக்கை வெளியிடுவதன்மூலம்எந்தத்தொழிலுக்குப் பாதகம் நேரிட்டதோ அந்தத் தொழிலுக்குச் சாதகம் ஏற்படக்கூடியபடி மேற்சொன்ன பொருளுக்கு சுங்க வரி விதிக்கலாம். காப்புவரிச் சட்டப்படி இவ்வரி விதிக்கப்படும். இது ஒரு தனி வரியாகவிருக்கும்.

* * *

மகாராஷ்டிர வர்த்தகர்களது 6-வது வருஷாந்தர மகாநாடு தூலியாவில் ஏப்ரல் 8, 9 ந்தேதி நடைபெற்றது. வால்சந்து ஹீராசந்து, தனுகர், பாப்ஹேல், பிராதகோத் போன்ற பிரபலஸ்தலர்களும் மகாநாட்டிற்கு வந்திருந்தார்கள். இந்திய வியாபாரம் கைத்தொழில் இவற்றைப் பாதுகாக்கவும் முன்னேற்றச்செய்யவும்போதிய அதிகாரத்தை புதியசட்ட சபைகளுக்கு சர்க்கார் அளிக்க வேண்டுமென்றும், ரயில்வே—பஸ் போட்டியை யோசிப்பதற்காக சிம்லாவில் கூடும் மகாநாட்டில் இந்திய வியாபாரிகளுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென்றும், பம்பாய் கைத்தொழில் இலாகாவின் வேலையைப் பாராட்டுவதாகவும், கைத்தொழில் டைரெக்டருக்கு அதிகப் பணம் ஒதுக்கி அவரது முயற்சிகளைப் பலப்படுத்த வேண்டுமென்றும், புதிய மாகாண சட்ட சபையில் மகாராஷ்டிர வியாபாரச் சங்கத்திற்கென தனிப்பிரதிநிதித்துவமளிக்க வேண்டுமென்றும், காப்பு முறையை மேற்கொள்ள வேண்டுமென்றும், சாத்தியமானவரை இந்தியாவில் உற்பத்தியாகும் பொருள்களையே ராணுவ ரெயில்வேத் தேவைகளுக்காக வாங்கவேண்டுமென்றும் இதற்காக இந்தியாவில் புதியகைத்தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமென்றும் கோருவதாகத் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

கல்கத்தாவின் மார்ச்மாத வெளிநாட்டு வியாபாரக்குறிப்பின்படி இறக்குமதி வியாபாரம் ரூ. 2.61 கோடியிலிருந்து 3.01 கோடிக்கு அதிகரித்திருக்கிறது. சென்ற வருஷம் இதே மாதத்தின் வியாபாரம் ரூ. 2.49 கோடி ஏற்றுமதி வியாபாரம் ரூ. 4.06 கோடியிலிருந்து ரூ. 3.67 கோடிக்குக் குறைந்து விட்டது. சென்ற வருஷம் இதே மாதத்தில் வியாபாரம் ரூ 3.78 கோடி. சென்ற வருஷம் இதேமாதத்துடன் இக்கணக்கை ஒத்திட்டுப் பார்த்தால் பருத்தி ஜவுளியில் ரூ 26 கோடிக்கு அதிகரிப்பு காணப்படுகிறது. இரும்பு எஃகு, சர்க்கரை இரண்டும் முறை 4-லக்ஷம், ரூ 2-லக்ஷம் குறைந்திருக்கின்றன. ஏற்றுமதியில் சணல் சாமான்கள் ரூ 10-லக்ஷம் குறைந்திருக்கிறது. சணல் மட்டும் ரூ 13-லக்ஷம் அதிகரித்திக்கிறது. தேயிலை ரூ. 27-லக்ஷம் அதிகம். நவதானியங்கள், மாவு முதலியன ரூ. 17-லக்ஷமும், வார்ப்பு இரும்பு அரக்கு இரண்டும் முறை ரூ. 2-லக்ஷம், ரூ. 4-க்ஷமும், குறைந்திருக்கின்றன.

* * *

‘டெயிலிமெயில்’ பத்திரிகையின் டோகியோ நிருபர் அறிவிப்பதாவது:— ஜெப்பான் பருத்தி ஆலைக்காரர்களின் ஐக்கிய சங்கம் அவஸரமாக ஒஸாகாவில் கூடி 1904-ம் வருஷத்து இந்திய ஜெப்பானிய வர்த்தக ஒப்பந்தத்தை ரத்து செய்வதாக ஜெப்பானியத் தூதரிடம் ஸர்ஜான் ஸைமன் சேர்ப்பித்து 6 மாத நோட்டீஸைக் குறித்து ஆலோசித்தார்கள். மேலே என்ன செய்வதென்பதைக் குறித்து விவாதிக்கப்பட்டது. ஜெப்பானியப்போட்டியை லங்காஷயர் வர்த்தகர்கள் எதிர்த்து நிற்க முடியவில்லையென்பதையே இந்தியகவர்ன்மெண்டின் நடவடிக்கை வெளிப்படுத்துகிறதென்று சங்கத்தலைவர் மிஸ்டர் புஷாஜிரோ, அபிப்பிராயப்பட்டார். ஜெப்பானிய கவர்ன்மெண்டின் பூரண ஆதரவைப் பெற்று பருத்தி ஆலைக்காரர்கள் சங்கம் தற்போதய நிலைமையைச் சமாளிக்க ஒரு திட்டம் தயாரித்து வருகிறது.

* * *

மாஞ்சஸ்டர் வர்த்தகர்களின் பெரிய கூட்டம் ஒன்றில், கவர்ன்மெண்டார் உடனே நடவடிக்கை எடுக்காவிட்டால் பிரிட்டிஷ் ஏற்றுமதி வியாபாரம் பாக்கியிருப்பதும் அழிந்து போகுமென்று உபந்யாசகர்கள் தெரிவித்தார்கள். மிஸ்டர் ஆஸ்ட்லிபெக் அக்கூட்டத்தில் தலைமை வகித்து, பார்லிமெண்டு இவ்வளவு அசிரத்தையாயிருப்பதற்குத் தாம் வருந்துவதாகவும், இந்தியாவில் லங்காஷயர் வியாபாரமே இல்லாமற் போய்விடுமாறு செய்வதைத்தடுக்க கவர்ன்மெண்டார் ஏதாவது செய்ய வேண்டுமென்று தாம் மன்றாடிக் கேட்டுக் கொள்வதாகவும் சொன்னார். இப்போதைய நிலைமையை சமாளிக்காவிடில், சீன மார்க்கட்டுகள் பூராவாக ஒழிந்து போவதுடன் இந்திய வியாபாரத்தையும் விசேஷமாக பாதித்துவிடுமென்று வேறு சிலர் வற்புறுத்திக் கூறினார்கள்.

* * *

மைசூர் திவான் ஸர் மிர்ஸா இஸ்மெயில் அவர்கட்கு:—

மைசூர் வர்த்தக சங்கம் அளித்த வரவேற்பு பத்திரத்திற்கு அவர் பேசியதாவது:- முந்நாளில் எவ்வளவு வேலை செய்து வந்தாலும் அவ்வித வேலைகளை இன்னும் அதிகமாக பிற்காலத்தில் செய்யவேண்டிய அவசியமிருப்பதாகவே நான் நினைக்கிறேன். உங்கள் சங்கத்தில் பற்பல வியாபாரக் கைத்தொழில்களிலும் ஈடுபட்ட பலர் அங்கத்தினர்களாக விருக்கிறார்கள். மோட்டார் போக்குவரத்துக்கு வரி விதிப்பதைப் பற்றியும், பட்டுக்குப் பாதுகாப்பு வரி விதிக்க வேண்டிய அவசியத்தைப்பற்றியும் நீங்கள் பிரஸ்தாபித்திருக்கிறீர்கள். சர்க்கரைத் தொழிலுக்கு உதவிசெய்யும் படியும் கேட்டிருக்கிறீர்கள். உதவி செய்வதென்பது இந்த பண நெருக்கடியான காலத்தில் மிக்க கஷ்டமென்பதை நான் வருத்தத்துடன் தெரிவிக்கிறேன்.

சட்ட சபைக்கு உங்கள் பிரதிநிதியை நீங்களே தெரிந்தெடுத்தனுப்ப உங்களுககு மஹாராஜா உரிமை கொடுத்திருக்கிறார். நீங்கள் தெரிந்தெடுத்தனுப்பும் அங்கத்தினர் தகுதி யுள்ளவராகவிருந்து எங்களுக்கு வியாபாரக் கைத்தொழில் விஷயங்களில் போதிய ஆதரவு அளிப்பார் என நம்பியிருக்கிறேன்.

* * *

1933-ம் வருடம் மார்ச்சு மாதம் 7வ 82 2/7 பவுன் எடையுள்ள பருத்தி (Cotton Liat) கீழ்க்கண்ட விலைக்கு விற்றது:-காக்கினடா ரூ. 14-11, ரெட் நார்தர்ன் ரூ. 16-8, வொயிட் நார்தர்ன் ரூ. 19-6, மங்கரி ரூ. 13-15, கம்போடியா ரூ. 19-3, திருநெல்வேலி கருங்கண்ணி ரூ. 17-12, ராடான் ரூ. 16-3, திருநெல்வேலி பருத்தி ரூ. 16-15.

N. M. ALLY & CO.,

SANJEEVI VAIDYA SALAI,

PORTO NOVO. S. A. Dt., (INDIA.)

கனதனவான்களே! **முக்கியம் !!** **கவனியுங்கள் !!**

ஒரே வேளையில் குணந்தெரியும்.

நாதங்கெட்ட தேகத்தைக் காக்கும்! நாள்பட்ட ரோகத்தைப் போக்கும்!

மன்மத சிங்கம்போல் செய்திடும்.

ஜீவரெத்தின சஞ்சீவி லேகியம்.

இந்த லேகியம் அசல் பாகத்திற்கோர் விகற்பமின்றி தங்கம், வெள்ளி, செம்பு, பவழம் ஆகிய பஸ்பம் செந்தூரங்களும், அம்பர், கஸ்தூரி, குங்குமப்பூ, எட்டுவித மிளிரிகள், பத்துவகை விதைகள், எழுவகைமூலிகை, சூரணங்கள், ஐந்துவேர் வகைகள், மற்ற அருமையான சரக்குகள் (192ம் நிறையளவு குறையாதபடி பாகம்செய்து வாலையந்திரத்திலிறக்கிய மான்நரம்பு, ஒட்டகை நரம்பு, ஆண்கோழி சத்தும் சேர்த்து பாகமாய்ச் செய்யப்பெற்றது. இந்த ஜீவரெத்தின சஞ்சீவி லேகியத்தில் ஓர் அபூர்வ சக்தி உபயோகித்தவர்களுக்குத்தான் இதன் அருமை தெரியும். இதை காலை மாலையில் உபயோகித்து ஒரு மண்டலம் (40-நாள்) உட்கொண்டால் வெகு சீக்கிரத்தில் வீரியத்தையும் பலத்தையும் கொடுத்து இந்திரியத்தை மணிபோல் கட்டி இழந்துபோன ஆண்மைத்தனம் முழுமையும் திரும்பி வரும்படிச் செய்கிறது. இக்குணம் இதில் அமைந்திருப்பது மகா ஆச்சரியமாக இருக்கிறது. இப்படியும் ஒரு மருந்துண்டா என்று பிரமிக்கச் செய்கின்றது. தாதை கட்டுவதில் அபார சக்தி வாய்ந்தது. இதன் ரகசிய பெருமை எழுதமுடியாது. நல்ல ஜீரண சக்தி, பசி, ரத்த விருத்தி உண்டாகும். இந்திரிய விருத்தியும் இந்திரிய புஷ்டியும், இந்திரிய கட்டும், தாதை மணியாக்கி ஆனந்தத்தையும் இன்பத்தையும் கொடுக்கும் அபார சக்தி வாய்ந்தது. சங்கம காலத்தில் ஸ்திரீ புருஷர்களுக்கு உண்டாகும் ஓர் நூதன இன்பம் இதிலமைந்திருப்பது மகா ஆச்சரியமாக இருக்கிறது.

கனதனவான்களே! நீங்கள் இதுவரையில் எத்தனையோ வித லேகியங்கள் சாப்பிட்டு இருப்பீர்கள். ஆனால் இந்த லேகியத்தில் அமைந்திருக்கும் குணங்களைப்போலுள்ள லேகியத்தை இதுவரையில் சாப்பிட்டிருக்கமாட்டீர்கள். ஒருதடவை பரீக்ஷை செய்து பாருங்கள்.

40-நாள் 80-வேளை 16-பலம் டப்பி 1-க்கு ரூ: 10. 20-நாள் 40-வேளை 8-பலம் டப்பி 1க்கு ரூ. 5.
10-நாள் 20-வேளை 2-பலம்டப்பி 1-க்கு ரூ. 1—4—0. 5-நாள் 10-வேளை 1-பலம் ,, அணா. 10.

☞ N.B: டஜன் கணக்கில் வரவழைப்பவர்களுக்கு வி. பி. பார்சல் சிலவு இனாமாக அனுப்பப்படும். சில்லரையாக ஆர்டர் செய்தால் வி. பி. பார்சல் சிலவு ரூ. 0–8–0. டஜன் கணக்கில் ஆர்டர் செய்பவர்கள். ரூ. 5 அட்வான்ஸ் அனுப்பி பாக்கித் தொகைக்கு வி. பி. யில் பணம் கட்டி பார்சலை பெற்றுக்கொள்ளவும். பினாங்கு, சிங்கப்பூர், கிள்ளான், குவாலாலம்பூர், பேரா முதலிய பிரதேச வாசிகள் மருந்தின் கிரயமும், தபால் சார்ஜு ரூ. 2—8—0யும் முன் பணமனுப்பி மருந்து பெறவேண்டும். ஷி ஊரார் வி. பி. யில் அனுப்பும்படி எழுதுங்கடிதங்களை அங்கீகரிக்கப்படமாட்டாது. தங்கள் விலாசம் தெளிவாய் எழுதவும். 1933-புதுவருஷம் வெளிப்படுத்தி யிருக்கிறோம். கனவான்கள் ஒரு தடவை பரீட்சை செய்யவும். பல ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை. தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

☞ எமது விலாசம்:—

என். எம். அலி அண்டு கம்பெனி,
சஞ்சீவி வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை.
தென்னாற்காடு ஜில்லா (இந்தியா.)

☞ எமது தெலுக்கன்சன் சோல் ஏஜண்டு:-

K. சின்னத் தம்பி,
நெ. 25, அனிசன்ரோடு,
தெலுக்கன்சன். P. O., F. M. S.

N. B:—ஆர்டர் செய்யும்போது இந்த பேப்பரைக் குறித்து எழுதவும்.

India's Gold Export.

That gold is being exported from India seems rather a bright prospect in the eyes of the Government because they urge that India had been a veritable sink for this metal for many years and it is good that now gold is being converted to some economic utility How is it that, according to s und principles of finance and banking, it is a crime to break into a gold reserve. The Finance Department estimates that from the end of September 1931 (just after Britain went off the Gold Standard) to 31st December 1932 the net balance of gold exports from India were valued at about Rs. 107.08 crores or £ 80 1/3 millions. (The total value of gold exported from Bombay since England went off the Gold Standard till 22nd April 1933 amounts to Rs. 1,224,738,253 Editor Varthaga Oolian.) During this same period of about 15 months India's exports of merchandise were valued at Rs. 181.37 crores and the imports at Rs. 161.45 crores, leaving a favourable balance of Rs. 19.92 crores or about £ 15 millions. This balance is supposed to have been converted into external currency by private individuals. Adding this £ 15 millions, acquired against merchandise, to the total of £ 80 1/3 millions obtained from gold exports, the total external balances acquired by private individuals, from 1st October 1931 to 31st December 1932, amounts to £ 95 1/3 millions. Out of this sum, it is now computed that Government has acquired by its purchases in the market as the Currency Authority no less than £ 69 2/3 millions. The Finance Member reveals that the aforesaid £ 69 2/3 millions have been well utilized. In first place Government have used about £ 34 millions in meeting its ordinary recurrent commitments. Secondly, they have used £ 15 millions in discharging the 5 1/2 per cent Sterling Loan, which matured on 1st January 1932, thereby liquidating an obligation which cost them £ 825,000 equivalent to Rs. 110 lakhs per annum and thus greatly strengthening their credit in London. Thirdly, the Government have added about £ 11 millions to the Currency Reserves; and lastly, the balance of 9 1/4 millions was added to the Government's Treasury balances and is really potentially available for further strengthening of the Currency Reserves. Looking at the gold export from the side of the people who have sold the 'distress gold,' the Finance Member estimates that they have received about Rs. 107 crores and also used the money to advantage. He admits that the bulk of this money has been expended to meet current requirements, some of which, we may safely presume, went to pay taxes to retain their lands. Then, he thinks that a portion of the gold sale proceeds has been invested in Post Office deposits and certificates, and yet another portion to investment in gilt-edged securities. In fact the Finance Member attributes to some degree the popularity of the recent Loans floated by Government to the sales of gold at a profit in the country. How far these sales have been profitable is a matter upon which nobody can dogmatize at present. The Finance Member moreover observes that a small part of this gold has come out the Treasuries of the Indian States and consequently cannot be regarded as 'distress gold.' But it is obviously not ascertained as yet if the Treasuries sold their own gold or the ornaments of the people melted into bars after purchase. The Deputy Master of the British Mint seems to have had a similar misconception when he saw the gold reaching the mint in bars and not in ornaments and so concluded that it was not 'distress gold.' Anyway. referring to this export, the Finance Member admits: "How long such a procees can, without damaging the country, continue is another matter." The Government could not stop it easily. Fundamentally the export of gold is, of course, due to our decline in exports. During the ten months from 1st April 1932 to 31 January 1933, India's total exports are valued at Rs. 110 1/2 crores as compared with a total export valued at Rs. 134 3/4 crores for the previous corresponding period. In almost all the main items the decline is accounted for by a fall in the quantities rather than in their prices—which is a very serious matter. This is true of the following decreases—cotton export by Rupees. 6½ crores, Jute by Rs. 1 3/4 crores, grain, pulse & flour by about Rs. 2 crores, and seeds by just over Rs. 2 crores The only exception to this decline in volume, under the major heads, is in the case of tea where a slight rise in the quantity exported has been accompanied by a fall of Rs. 3 crores in value. (Commercial India.)

Why Business Fails?

That is a crucial question which every businessman should ask himself There must be something lacking in a businessman—want of efficiency, want of tact, what not—there must be some negligence or carelessness which causes a downfall. A business may be top heavy and although appearing substantially built standing on forthy substructure. A business usually fails for internal faults of its own. Even a pioneer fails or an inventor also; but you will find it is due to lack of tact or salesmanship. The most common causes of failure are firstly lack of capital, secondly, lack of training or education. thirdly too much competition and fourthly, general business depression. There is an art in profit making and if whatever capital you have invested makes good profit, you will scarcely lack capital. There are firms who get ample credit. There are others who do not. The difference lies in the fact that one firm knows how to make capital yield good profit while the other firm does not know. If you want more capital you must make

good profit. Study your business. Train yourself to be better and better informed than any one in your line. You might not have gone to college, but there are plenty of books now-a-days which will train you up. Unless you are lazy—too lazy to learn—you need not remain unlearned and uneducated and complain of lack of education. Competition there indeed is and shall remain. Business always means competition—for competition alone keeps business alive. That is why business requires the services of the keenest brains in the country. Unfortunately in this country civil service absorbs them and encourages those who are not within it to hanker after it till one is disappointed and broken hearted. Business compels us to do our best and draws the best from us. When we say there is too much competition it cannot but mean that the competitors are more efficient. Japanese cloth traders are certainly more efficient than the Bombay traders and manufacturers, than even the Lancashire traders and manufacturers. When competition is keen it behoves every trader to whip up his faculty and not to shilly-shally with business. General business depression is a serious matter. It overthrows sometimes even a competent man as an earthquake knocks to the ground even a well built house. But many small businessmen grew into big ones by using depressions to their own advantage. Even when a small man pushes his business he becomes conspicuous. When the competitors go down a businessman is wise to hurl ahead. Many a great business has started in a depression. The depression makes people lose confidence. They become pessimists and eventually become stepping stones to the most wary to rise. He who has pluck and stamina need not sit down but rises to the top. There may be other causes of failure, but these four causes can be overcome and self-help, initiative, courage and efficiency conquer all these. The countless people who make use of a commodity is the last objective for whom thousands of people are employed to collect raw materials and prepare useful articles. They are the customers. and to reach them, it is necessary that with the vast change that has been effected in the method of production the art of distribution should be highly developed. The psychology of the consuming public must be studied and those from whom the public buys must be trained in the light of this study. Time was when people would like to buy any goods the factory produced. But now with the development of production the time has come when the factory must produce to the liking of the people. This imperatively requires better methods of distribution and better training for the distributor who will ensure the factories producing goods to the liking of the purchasing people. Our cottage industrialists lack the help of these body of distributors who will study the customer's mind and connect the customer's requirement to the production efficiency. Here is a vast field for our young men to employ themselves. The bridge between the consumers and the producers needs spaning and this calls forth for the services of men of new ideas and methods. (Commercial India).

Swadeshi Slates.

Best Swadeshi slates manufactured; Slatepencils, chalks, Buttons are supplied.

Apply to:—

V. V. Krishnamurthy,

Sri Vivekananda Swadeshi Slate Works,

Markapur (M.S.M.Ry.)

WANTED

Capable agents of influence among merchants in all the important towns to canvass subscribers and to get advertisements for "Varthaga Oolian". Liberal terms to really capable workers.

Apply to:— The Manager,

Varthaga Oolian, Trichinopoly.

S. I. CHAMBER OF COMMERCE.

The following are the personnel of the various Standing Subcommittees of the Southern India Chamber of Commerce Madras for the year 1933-34.

TRADE MARKS:—(1) Diwan Bahadur Govindas Chathoorbhoojadoss Garu, Messers. (2) C. Gopal Menon, (3) V. K. Chetty, (4) Mir Casim Ali, (5) Yakub Ali Khan, (6) Ismail Musa Sait, (7) K. Alavandar Naidu, (8) K. Balakrishna Mudaliar. (9) T. Thiruvenkatachary. (10) Adam Haji Mohomed Sait (ex-officio), and (11) K. K. Srinivasan (ex-officio).

TAXATION AND FINANCE:—(1) Mr. C. Gopal Menon, (2) Kumararajah of Chettinad, Messrs: (3) V. Ramadoss Panthulu, (4) Yusuff Sait, (5) K. Sriramulu Naidu, (6) M. Mohamed Ismail Sahib and (7) the secretary, ex-officio).

IMPORTS:—Messrs. C. Gopal Menon, (2) Yusuff Sait, (3) B. Sundara Bashyam, (4) K. Alavandar Naidu, (5) G. Bapiah Choudhry, (6) V. Devarajulu Chetty, and (7) the Secretary (ex-officio).

EXPORTS:-(1) Mr. M. Mahomed Ismail Sahib, (2) Diwan Bahadur M. Balasundaram Naidu, Messrs. (3) K. Bhadriah Chetty, (4) M. Ranganayaculu Naidu, (5) M. J. Jamal Moideen (6) K. Alavandar Naidu, and (7) the Secretary (ex-Officio).

TRANSPORT:-(1) Mr. K. Sreeramulu Naidu, (2) Diwan Bahadur M. Balasundaram Naidu, Messrs. (3) M. M. Syed Mohomed Rowther, (4) Laldoss Govindoss, (5) B. Sundara Bashiam (6) O. C. P. F. Abdul Kader Sahib Rao Sahib T. S. Kachapikesa Mudaliar, (8) Mr. V. K. Chetty, and (9) the Secretary (ex-Officio).

LABOUR:—(1) Kumararaja of Chettinad, Messrs. (2) Yusuff Sait, (3) K. Sreeramulu Naidu, (4) V. Ramadoss Panthulu, (5) M. Mahomed Ismail Sahib and (6) the Secretary (ex-Officio).

FEDERATION OF COMMERCE.

The sixth annual session of the Federation of the Indian Chambers of commerce, was held at New Delhi on 15th April, Mr. Walchand Hirachand presided.

The following Resolutions were carried.

Gold Export.

This Federation views with alarm the continued out flows of gold from India valued at over 120 crores of rupees since September 1931 and regrets the policy in action on the part of the Government of India in spite of strong protests by the Indian mercantile community. In view of the huge loss of immense potential strength, which gold resources of India might have supplied to the future Reserve Bank this federation reaffirms necessity for steps being taken forthwith by the Government to put embargo on export of gold and buy gold in India for the purpose of strengthening currency reserve at rates equivalent to sterling rates gold in London.

This Federation protests against the Government policy in keeping the Rupee linked to sterling and urges that rupee be allowed to find its own level.

POLICY OF SILVER SALES.

Federation resolved regretting that the Government should continue policy of silver sales despite public protests, and expressed the opinion that since the recommendations of the Hilton Young Report are not now operative, the Government snould stop further sales of silver.

Sir Purushotamdas moved a resolution, protesting in view of the present critical economic situation in the country against the Government of India's decesion for partially restoring cut in salaries of the Government servants without first giving any relief to the tax-payer.

DISSATISFACTION WITH INCOME-TAX POLICY

"The Federation expresses its deep dissatisfaction with the entire Income-tax policy of the Government of India, and urges upon them to give effect as early as possible to the following demands of the mercantile community namely (a) abolish altogether surcharges now levied on income-tax and super tax (b) to lower substantially the present high rates of income tax and supertax, (c) to raise amount of minimum taxable income from Rs. 1,000 to Rs 2000 (d) to amend Income-tax Act so as to provide for set off for losses sustained in any one year against profits for three subsequent years. (e) to provide that appeals from income tax officers both on points of fact and law should lie to independent tribunal.

PARLIAMENTARY LEGISLATION ON INDIAN RAILWAYS.

"The Federation emphatically opposes proposal for parliamentary legislation on Indian Railways as it is not only tantamount to a repudiation of autonomous powers of the Indianl egislatures but militates against elasticity of machinery which must needs acommodate itself to demands of the Indian transportation problems.

The Federation, therefore is strongly of opinion that in the interests of the Indian trade and industry, no proposal for Statutory Railway Board would be acceptable unless constituted by an act of the Indian Legislature. The Federation deprecates formulation of proposal for Statutory Board, as suggested in the White Paper in the absence of any adequate consideration or discussion at the sessions of the Round Table Conference and without consulting the Indian commercial opinion on the matter.

"The Federation invites the attention of the Government of India to the great handicap felt by sugar industry owing to the increasing difficulty, experienced by the sugar factories and refineries in the disposal of molasses, produced by them. The Federation suggests that the Government of India should give full encouragement and assistance to the Sugar Industry for the production of power alcohol, especially admixture of alcohol with petrol as fuel for internal combustion engines.

In particular, the Federation suggests that every measure should be adopted by the Government in order to override the difficulties of a merely technical character (e. g. existing denaturing rules) or relating to revenues (revenues derived by the Central Government from petrol or provincial Governments from country liquor).

The Federation recommends to the Government that import duty on rectified spirits on molasses and on rab be increased to such an extent as would ensure adequate protection of subsidiary industries dependent on sugar industry in India from foreign competition."

A resolution drawing attention of the Government to the absolute inadequacy of statistics of foreign capital invested in India and commending annual compilation of a comprehensive statment of actual foreign capital invosted in India, including private investments was passed with one dissentient vote.

ABOLITION OF LEVY ON RAILWAY FREIGHT.

Mr. M. L. Ojha moved that levy of 15 per cent. surcharge on Railway freight on coal despatched after January 15, 1932 created great detrimental effect on coal Industry, and had been responsible for the loss of markets in many impertant industrial centres, and urged necessity for its immediate abolition with a view to help the indigenous Industries.

PROTECTION TO INDIAN INDUSTRIES

Mr. B. K. Chetty moved a resolution urging upon the Government of India the desirability of adopting immediate measures, indicated below to afford adequate protection to the various industries namely (a) that export duty on raw skins and hides be raised to 25 per cent. and 20 per cent. respectively, (b) That duty of Rs. 50 per ton or 50 per cent. "ad valorem" whichever is higher should be levied on imports of cast iron pipes and further that tariff value of Rs. 140 a ton may at least be substituted for "ad valorem" valuation now being adopted in Indian customs tariff so as to secure immediate relief to Indian cast iron & pipe industry.

FEDERATION & RAIL-ROAD CONFERENCE

The Federation understands that non-official representatives connected with the vested interests in the development of bus traffic are invited and is emphatically of opinion that in order to safeguard the interest of the commercial community representatives of the Indian Commercial opinion should be asked to attend the said conference.

மதிப்புரை.-(REVIEWS.)

திருச்சி முருகவிலாஸ ஸ்ரீமுக வருஷ த்திய வாக்ய பஞ்சாங்கம், திருமாலிருஞ் சோலை ஸ்ரீமுக வருட வாக்ய பஞ்சாங்கம் இரண்டும் நமது பார்வைக்கு அனுப்பப் பட்டது பஞ்சாங்கத்துக்குள்ள எல்லா அம்சங்களும் பொருந்தியிருக்கின்றன முதலாவது இரகுநாத சமுத்ரம் ஜோதி யம் ஸ்ரீனிவாசராகவையங்கார் அவர்களா லும் இரண்டாவது மதுரை ஸ்ரீ கள்ளழ கர் தேவஸ்தானம் ஜோஸ்யம் பஞ்சாங்க கணிதம் நரசிம்மய்யங்கார் அவர்களாலும் கணிக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாங்கம் வேண்டுபவர்கள் திருச்சி பெரிய கடை வீதி முருகவிலாஸ் ஜனானுகூல அச்சுக் கூடத்திலும் மதுரை ஸ்ரீ கள்ளழகர் தேவஸ்தான ஜோஸ்யம் திரு. நரசிம்மய் யங்கார் அவர்களிடத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

நாணயமாற்றம்.

Exchange (30—4—33)

	பென்சு
பாங்குரேட் லண்டன் தந்தி	18
பாங்குரேட்லண்டன்தரிசனம்	18
லண்டன் தந்தி விற்கிற விலை.	18 1/32
தரிசன உண்டி விற்கிற விலை	18 1/32
தந்தி வாங்குகிற விலை	18 3/32
ஷெ தரிசன உண்டி	18 1/8
பாரிஸ் லண்டன் மேல் தந்தி ஸ்டர்லிங் பவுன் 1-க்கு பிராங்கு	86 1/2

சிங்கப்பூர் வட்டம் விற்கும் விலை வெள்ளி 100-க்கு ரூ. 156½.

சிங்கப்பூர் வட்டம் வாங்கும் விலை வெள்ளி 100-க்கு ரூ. 150.

பிரான்ஸ் மேல் தரிசன உண்டி விற்பனை ரூ. 100-க்கு பிராங்கு 635.

ஜர்மனி தரிசன உண்டி விற்பனை ரூ. 100-க்கு மார்க்கு 105.

அமெரிக்கா தரிசன உண்டி விற்பனை டாலர் 100-க்கு ரூ. 380.

அமெரிக்கா தரிசன உண்டி வாங்குவது டாலர் 100-க்கு ரூ. 332.

சிங்கப்பூர் தரிசன உண்டி விற்பனை டாலர் 100-க்கு ரூ. 156½

சிங்கப்பூர் தரிசன உண்டி வாங்குவது டாலர் 100-க்கு ரூ. 150.

ஜப்பான் தந்தி ல்லது தரிசன உண்டி விற்பனை என் 100-க்கு ரூ. 89.

Books Received.

The Director of Industries, Travancore, was kind enough to send the following Bullettins for our perusal:—

(1) Report on the oils of Travancore by Mr. C. Kumara Das, Industrial Chemist.

(2) Report on the scope of Leather manufacture in Travancore by Mr. A. K. George, Tanning Expert.

(3) Some experiments in Pottery by Mr, C. Kerala Varma, Chemical Assistant.

(4) The more important tanning materials of Travancore by Mr A. K. George, Tanning Expert.

(5) Preservation of Ginger in Syrup by Mr. C. Kumara Das, Industrial Chemist.

(6) Travancore Essential oils

They contain valuable informations for the Commercial world & we recommend to the Industrialists to study them.

வியாபாரத்திற் கழகு
விளம்பரம் செய்தல்.

தங்கள் வியாபாரத்திற்குள்ள டிரேட் மார்க்குகள், பெயர்கள், லேபில்கள் முதலியவைகளை மற்ற வியாபாரிகள் உபயோகித்து உங்கள் லாபத்தை அடையுமுன் நீங்கள் அவைகளை உடனே

கல்கத்தா ரிஜிஸ்டர் செய்துகொள்ளவும்.

விலாசம்;—ஆல் இந்தியா ரிஜிஸ்ட்ரேஷன் ஏஜென்ஸி,
முழு விபரம் இனும். ஹீபர் ரோட், பாலக்கரை, திருச்சினுப்பள்ளி.

LUCK FOR ALL.
Employment For 500 Men Atonce.

Earn Rs. 50 a month decently by learning the Trade Secret Formulas for preparing (1) Medicine like **(Minsararasam)** (2) Pain Balm like **(Amrutanjan)** (3) Soap like **(Sunlight)** (4) Hair Oil like **(Kaminia Oil)** and (5) Ink like **(Swan Ink)**

Processes most easy and practical.

N.B.—By learning these Trade Secret Formulas you become your own manufacturer,

Profits in a manufacturing business are simply enormous, articles made for a few annas often sell for as many Rupees.

FEES:—Rs. 2 for each Trade Secret Formula or Rs. 6—4—0 (Rupeee Six and annas Four) only for the whole set of 5 Formulas.

TESTIMONIAL.

M. GULAM MUSTHAFA, Madura.—Writes on 11-4-29:—"I am glad to inform you that I have succeeded in preparing SOAP like SUNLIGHT with your process"

Apply to:—**PRINCE & Co., Patent Training Dept. (B.)**
18, Tennore, (2) Trichinopoly, (S. India).

விளம்பரமே வியாபாரத்திற்கு அடிப்படை

உங்கள் விளம்பரம் கண்ணைக்
கவரக்கூடியதாகயிருந்தால்
உங்கள் வியாபாரம்
அபிவிருத்தி யடைந்து
நல்ல லாபம் பெறுவீர்!

அத்தகைய விளம்பரத்திற்கு
சாதகமாகவுள்ள உங்கள்
எந்த அச்சுவேலைகளையும்
ஒரு சிறிய நோட்டீஸ்
முதற்கொண்டு போஸ்டர்
முதலிய யாவற்றையும்

திருச்சி பெரிய கடை வீதியிலிருக்கும்

முருகவிலாஸ்

ஜனானுகூல அச்சாபீஸுக்கு

இன்றே அனுப்புங்கள்

கண்ணுக்கு அழகாயும் நேர்த்தியான நடையில் உங்கள் அச்சுவேலைகளை முடித்து
— தருகின்றோம் —
குறைந்த சார்ஜ்! குறைந்த சார்ஜ்!!

ஒரு முறை உங்கள் அச்சுவேலைகளை நமது அச்சாபீஸுக்கு அனுப்பி உங்கள் வேலையின் நயத்தையும் வனப்பையும்
பரிசோதியுங்கள்! பரிசோதியுங்கள்!

சி. சோமு பிள்ளை,

இரும்பு வியாபாரம்,

மயிலஞ்சந்தை, திருச்சினாப்பள்ளி.

எங்களிடம் கைதேர்ந்த வேலைக்காரர்களைக் கொண்டு தயார் செய்த உயர்ந்த பூட்டு தினுசுகளும், பம்பு (pipe) குழாய் பிட்டிங் சாமான்கள் பூராவும் குளவு நாகத்தகடுகளும், உயர்ந்த மார்க்கு சிமிட்டு முட்டைகளாகவும், பீப்பாய்களாகவும், கட்டிடங்களுக்கு உபயோகப்படும்படியான கர்டர்களும், சகலவிதமான வர்ணம், வார்னீஷ் தினுசுகளும் வெகு சரசமாயும் நயமாயும் கிடைக்கும்.

சகலவித ஸ்டேஷனரி சாமான்களும் தெப்பகுளம் சமீபத்திலிருக்கும் எமது ஷாப்பு கடையில் நயமாய் கிடைக்கும்.

உங்கள் டிரேட் மார்க்குகள்

பெயர்கள், லேபில்களை

பிறர் உபயோகித்து

உங்கள் லாபத்தை அடையாமலிருக்கும் பொருட்டு

கல்கத்தா ரிஜிஸ்டர்

செய்து கொள்ளவும் முழு விபரம் இனாமாக அனுப்பப்படும்

விலாசம்:— ரிஜிஸ்ட்ரேஷன் ஏஜென்ஸி,

9. சுண்ணாம்புகாரத் தெரு, திருச்சினாப்பள்ளி.

ஸ்ரீ தென் பண்டரிபுரம்

பாண்டுரங்கனை அவசியம் வந்து சேவிக்கவும்.

ஷை சன்னதி பிரைஸ் சீட்டு

2-வது பிரைஸ்.

சித்திரை-மீ 30-உ (12-5-33) பிரைஸ் போடப்படும்

ஸ்ரீமுக-ஷு ஆடி-மீ 10-உ (25-7-33) முதல் 20- (4-8-33) வரை

ஆசாட ஏகாதசி உற்சவம்.

ஆடி 18-உ (2-8-33) ருக்மணி கல்யாணம்

ஷை 19- (3-8-33) ஆடும் பல்லாக்கு.

தி. வி, கோ. ராஜு நாயுடு பருங்குச தாஸ் பாகவதர்

தென் பண்டரிபுரம், திருச்சி.

அறிவிப்பு.

வார்னீஷ்

வர்ணங்கள்

கண்ணாடிகள்

படங்கள்

கண்ணாடி

மணி தினுசுகள்

கலர் காகிதங்கள்

வர்த்தி தகடுகள்

முதலியன

விலை சரசமாய்

கிடைக்குமிடம்

T. R. ரெங்கசாமி நாயுடு,

வர்ண வியாபாரம்,

341-42 பெரியகடைவீதி,

திருச்சினாப்பள்ளி.

S. RETHINAVELU CHETTY,

SHROFF MERCHANT,

BIG BAZAAR STREET, TRICHINOPOLY,

All kinds of Jewels set with No. 1 Indian Chemical Diamond, the best in the Market, can be Supplied at cheap rates.

சி. ரெத்தினவேலுசெட்டி

ஷாப் வியாபாரம், பெரியகடைவீதி திருச்சி.

நெ. 1 இந்தியன் கெமிகல் டைமண்டு

குணத்தில் சிறந்தது. விலையில் குறைந்தது. கைதேர்ந்த வேலைக்காரர்களைக்கொண்டு எமது மேற்பார்வையில் தயார் செய்யப்பட்டது. நெ. 1 இந்தியன் கெமிக்கல் டைமண்டு கற்கள் உறுதியிலும் பிரகாசத்திலும் அசல் வைரங்களுக்கு ஒப்பாக விளங்குகின்றன. ஒரு முறை வரவழைத்துப்பார்த்தால் உண்மை விளங்கும். 1நெ. இந்தியன் கெமிகல் டைமண்டு கற்களைக்கொண்டு பவுனில் கட்டப்பட்ட பலவிதமான நகைகளும் அசல் 1 நெ. ரங்கூன் புது வைரங்கள் இமிடேஷன் புஷ்பராகம் தளுக்கு படிக்கம் இமிடேஷன் பட்டை சிகப்பு, பூரு குச்சை பிளேன் பட்டை சிகப்பு, நீலம் திரிகலர், பச்சை முதலிய கற்களும் வர்ணத்தகடுகள் முதலியவைகளும் சரக்கு சுத்தமாயும் விலை சரசமாயும் எம்மிடம் கிடைக்கும்.

மேற்கூறிய தினுசுகளில் 2-ம் நெ. கற்களும் கைவசமிருக்கின்றன.

வெளியூர் ஆர்டர்களை உடனுக்குடன் கவனித்து அனுப்பப்படும் விலை விபரங்களுக்கு எழுதுக.

மைலேஜ் கூப்பன் : :
: : புத்தகங்கள்

1933-ம் வருஷம் ஏப்ரல்-மீ 15-ந்தேதியிலிருந்து, லோக்கல் புக்கிங்கிற்கோ அல்லது துரூ புக்கிங்கிற்கோ தென்னிந்திய ரயில்வேயிலும், எம். எஸ். எம். ரயில்வேயிலும் டிக்கெட்டுகளை மாற்றிக்கொள்ள வியாபாரக் கம்பெனிகளுக்கான தென்னிந்திய ரயில்வே மைலேஜ் கூப்பன் புத்தகங்கள் செல்லத் தக்கனவாகும்.

2. 1933-ம் வருஷம், ஏப்ரல் மாதம் 15-ந் தேதியிலிருந்து எம்.எஸ்.எம். ரயில்வே மைலேஜ் கூப்பன் புத்தகங்களின் விலை முதல் வகுப்புக்கு ரூபாய் 280 ஆகவும், இரண்டாவது வகுப்புக்கு ரூபாய் 140 ஆகவும், அதாவது தென்னிந்திய ரயில்வேயிலுள்ள விலைக்கே,— குறைக்கப் பட்டிருக்கின்றது. ஆகவே லோக்கல் புக்கிங்கிலோ அல்லது துரூ புக்கிங்கிலோ 1933-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 15-ந்தேதியன்றும், அதற்குப் பிறகும் வெளியிடப்படும். எம். எஸ். எம். ரயில்வே கூப்பன் புத்தகங்கள் கூப்பன் புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள காலவரையறை வரைக்கும் எம். எஸ். எம் அண்டு தென்னிந்திய ரயில்வேக்களில் டிக்கெட்டுகளை மாற்றிக்கொள்ளுவதற்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

3. 1933-ம் வருஷம், ஏப்ரல் மாதம், 14-ந்தேதி வரையில் தென்னிந்திய ரயில்வேயினாலேயோ அல்லது எம். எஸ். எம். ரயில்வேயினாலோ வெளியிடப்படும் மைலேஜ் கூப்பன் புத்தகங்கள், தென்னிந்திய ரயில்வேயிலும் சரி, அல்லது எம். எஸ். எம் ரயில்வேயிலும் சரி லோக்கல் புக்கிங்கிக்கு மாத்திரம், கூப்பன் புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள செல்லுபடியாகு[ம்] காலம் வரையிலும் டிக்கெட்டுகளை மாற்றிக்கொள்ளுவதற்காக ஏற்றுக்கொ[ள்] ளப்படும். எந்த விதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும் உட்பட்டு அவை[...] வெளியிடப்பட்டனவோ அவற்றிற்கு அவை கட்டுப்பட்டனவாகும்.

4. தென்னிந்திய ரயில்வே டைம்டேபில்களின் 59-A [...] கொண்ட பாராவில் கண்டுள்ள மற்ற விதிகளிலும் நிபந்தனைகளிலு[...] மாறுதலுமில்லை.

தென்னிந்திய ரயில்வே கம்பெனி லிமி[...]

(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது.)

திருவாங்கூர் நேஷனல் பாங்கு

லிமிடெட்.

(1912-ஷு திருவாங்கூரில் இணைக்கப்பட்டது)

ரிஜிஸ்தர் ஆபீஸ் :- திருவல்லா

தலைமை ஆபீஸ் :- ஆலப்பிழை.

பிராஞ்சு ஆபீஸ்கள் :—

மதருஸ், மதுரை, திருச்சிறுப்பள்ளி, உதகமண்டலம், கள்ளிக்கோட்டை, உடுமல் பேட்டை, திருவனந்தபுரம், கொல்லம், கோட்டயம், எர்ணுகுளம், கொச்சி, திருப்பணித் துறை, தேவிகுளம், மூணர், திருச்சூர், திருப்பூர், விருதுநகர், பம்பாய்.

18—1—1933ல்	செலுத்தப்பட்ட மூலதனம்	ரூபாய்	4,22,050—1—4.
,,	காப்பு திரவியம்	,,	2,00,000—0—0.
	கவர்ன்மெண்டு பாண்டிலும், நெடுந்தவணே. டிப்பாசிட்டாகவும், இதர பாங்குகளில் போடப் பட்டிருக்கும் தொகையும், கையிருப்பும்	,,	9,79,166—6—4.
,,	மொத்த வியாபார மூலதனம்	,,	61.73,816-10—7.

3-நெ. மாதாந்திர ஏலச்சீட்டு.

ஏ.	வகுப்பு	மாதம் 1-க்கு	ரூபாய் 40 விதம்	25 மாதத்திற்கு	முதல்	ரூபாய்	1000.
பி.	,,		,,		,,	,,	500.
ஸி.	,,		,,		,,	,,	250.
டி.	,,		,,		,,	,,	125.

ஏலத்தில் சேர்ந்திருப்பவர்களுக்கு விதிகளின்படி டிவிடெண்டு கொடுக்கப்படும். முதல் சீட்டு 1933-வருஷம் மே-மாதம் 5-தேதி வெள்ளிக்கிழமை எடுக்கப்படும்.

ஏலத்தில் சேருபவர்களை இப்பொழுது முதலே சேர்க்கப்படுகிறது. 1933-ஷு மே-மீ 4வுக்குள் சேர்ந்துவிட வேண்டும். அதற்குப்பின் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள்.

சீட்டு சம்பந்தமான விபரங்களும், மனு பாரங்களும் திருச்சி கிளைபாங்கியில் பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான சரக்குகளின் ஈட்டின் பேரில் குறைந்த வட்டிக்கு பணம் கொடுக்கப் ...டும். கீழ்க்கண்ட பிரகாரம் தங்க நகைகளின்பேரில் வட்டிக்கு கடன் கொடுக்கப்படும்.

ரூ. 1000-க்குமேல் 7½ % ரூ. 500-க்குமேல் 8% ரூ. 20-க்குமேல் 9%

...றைப்பள்ளி.
...33.

கே. ஜே. நைனன்,
ஏஜண்டு,
திருச்சிறுப்பள்ளி பிராஞ்சு.

... Nilayam Press, Trichinopoly. Edited and published by T. V. K. Naidu ... "Varthaga Oolian" S. V. S. Buildings, Big Bazaar St, Trichinopoly.